# 2018 වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
# Annual Performance Report

මහානගර හා බස්නාහිර සංවර්ධන අමාත්‍යාංශය
மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
Ministry of Megapolis and Western Development



# மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

## *வருடாந்த செயற்பாட்டு அறிக்கை - 2018*

17 வது மாடி, சுகுறுபாய, சுகுதிபுர வீதி, பத்தரமுல்ல.
தொலைபேசி : 0112 864 770 /0112 866 447

பெக்ஸ் : 0112 887 909

மின்னஞ்சல் : info@megapolismini.gov.lk

இணையத்தளம் : www.megapolismin.gov.lk

# மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

## கௌரவ பாட்டளி சம்பிக்க ரணவக்க (பா.உ.)
## அமைச்சர், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

**அமைச்சின் பிரதான நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள்**

**திரு. நிகால் ரூபசிங்க,**

*செயலாளர், மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு*

**திரு. எஸ்.எம். பியதிஸ்ஸ,**

*மேலதிக செயலாளர் (நிர்வாகம்)*

**திரு. டபிள்யு.எம்.கே.பீ.எஸ்.ஆர். பிரனாந்து**

*மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்)*

**திரு. மாதவ வைத்யரத்ன,**

*மேலதிக செயலாளர் (மாநகரம்)*

**திருமதி. அஞ்சலி தேவராஜா,**

*மேலதிக செயலாளர் (மாநகர தொழில்நுட்பம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி)*

## பொருளடக்கம்


**1. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ............................................ 01-02**

**2. அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு ………………………………………...... 02**

**3. துறைசார் செயற்திறன்**

3.1 நிர்வாகப் பிரிவு

3.1.1 நிர்வாகக் கிளை ........................................................................................... 03-08

3.1.2 திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுக் கிளை …………………............ 08-10

3.2 கணக்குகள் பிரிவு ........................................................................................ 10-14

3.3 நகர அபிவிருத்திப் பிரிவு

3.3.1 நகர அபிவிருத்திக் கிளை …………………………………………… 15-16

3.3.2 காணிக் கிளை ……………………………………………………….... 17

3.4 மாநகரப் பிரிவு ………………………………………………………………… 17-19

3.5 தொழில்நுட்பப் பிரிவு

3.5.1 தொழில்நுடபக் கிளை ………………………………………… 20-21

3.5.2 தகவல் தொழில்நுட்பக் கிளை ...................................................... 22

3.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு …………………………………………….. 22-23

**4. அமைச்சின் கீழுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் 23-24**

**5. அமைச்சினூடாக அமுலாக்கப்பட்டு வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்**

5.1 வெளிநாட்டு நிதியங்களின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள் .......... 25-26

5.2 உள்நாட்டு நிதியங்களின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள் ............. 27-30

# 1. மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

## தொலைநோக்கு

மக்களின் பொருளாதார மற்றும் ஆன்மீக நல்வாழ்வு அதே போல இயற்கையுடன் ஐக்கியமான செழிப்பான வாழ்க்கையொன்றினை உறுதிப்படுத்தும் நிலைபேறான நகர வாழ்க்கையொன்று.

## பணிக் கூற்று

சிறந்த நகர்ப்புற திட்டமிடல், பொறியியல் திறமைகள், அதி உன்னத நவீன தொழில்நுட்பம் மற்றும் உலகின் உன்னதமான நடைமுறைகளைப் பயன்படுத்தி, நாட்டின் மூலோபாயமான ரீதியில் முக்கியமான இடங்களில் நன்கு திட்டமிடப்பட்ட பசுமை, சுத்தமான மற்றும் அழகான நகர்ப்புற குடியிருப்புக்களை உருவாக்குவதனூடாக தேசத்தின் பொருளாதாரச் செழிப்பினை அடைதல் மற்றும் இலங்கைவாழ் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.

## நோக்கங்கள்

அமைச்சின் அடிப்படை நோக்கமாவது, மக்களின் வாழ்க்கையின் தரத்தினை உயர் மட்டத்தில் முன்னெடுப்பதுடன், நகர்ப்புற பிரதேசங்களில் வாழும் மக்களை நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் பங்குதாரர்களாகக் கொண்டு உறுதிப்படுத்தப்படும் முறைசார் மாற்றங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நகர்ப்புறச் சமுதாயத்திற்குக் கொண்டு செல்லுவதுமாகும். இதனூடான இலங்கையினை ஆசியாவின் வர்த்தகம், கப்பல் மற்றும் விமான நிலையமாக மாற்றுவதற்கு இயலும்.

இவ் அமைச்சின் அடிப்படை பொறுப்புக்களுக்கிடையே ஒட்டுமொத்த இலங்கைக்குமான தேசிய பௌதிகத் திட்டத்தினைத் திட்டமிடுதல், மூலோபாய, பொது நகரத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அமுற்படுத்துதல் உள்ளடக்கப்படும். அதேபோல அடுத்து வரும் ஐந்து வருடங்களினுள் மேல் மாகாணத்தில் முழுமையான அபிவிருத்தியொன்றினை ஏற்படுத்தும் நோக்குடன் அதனை மாநகரமொன்றாக மாற்றுவதற்கு அமைச்சு எதிர்பார்க்கின்றது.

மேல் மாகாண பிராந்திய மாநகர அபிவிருத்திச் செயற்பாட்டினை, இலங்கையில் நீண்டகாலம் சிறந்தவாறு முன்னெடுத்து, நிலைபேறான எதிர்காலத்தினை நகர்ப்புறச் செயற்பாட்டிற்கு வழிகாட்டும் அபிவிருத்திக்கு கேந்திரமாகக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.. நாட்டின் மூலோபாய ரீதியில் முக்கியமான இடங்களில் வசதியான நகர்ப்புற குடியிருப்புக்களைத் திட்டமிடுவதற்கு மேலாக அதனூடாக நகரமயமாக்கலின் காரணமாக உருவாக்கப்பட்ட கழிவு, சேரிகள், ஆற்றல், போக்குவரத்து நெரிசல், சுற்றுச்சூழல் மற்றும் வாழ்வாதாரத்துடன் தொடர்புபட்டு எழுந்துள்ள குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தேவையான தீர்வுகளை வழங்குவதற்கும் முயற்சிக்கப்படுகின்றது.

## அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், நியதிச் சபை நிறுவனங்கள்,

- தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்
- நகர அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

## அமைச்சின் கீழுள்ள உள்ளூர் நிதியக் கருத்திட்டங்கள்.

- துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- கொழும்பு தலைநகருடன் தொடர்பான திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய தொழினுட்ப நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய விமான நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய கடல்சார் நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய நிர்வாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- சகசர கருத்திட்டம்
- திருகோணமலை மாவட்டத்திற்கான பிரதான திட்டமொன்றினைத் தயாரித்தல்
- நகர மீளுருவாக்க கருத்திட்டம்

**அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்படும் வெளிநாட்டு நிதியக் கருத்திட்டங்கள்**

- மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டம் (கண்டி, காலி, யாழ்ப்பாணம், அனுராதபுரம், குருனாகல், தம்புள்ள, திருகோணமலை, இரத்தினபுரி)
- கொழும்பு நகரினை அண்டிய நகர அபிவிருத்தி கருத்திட்டம்
- பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் நகர அபிவிருத்தி சாதனம் (3K).
- கனமற்ற புகையிரதப் போக்குவரத்துத் திட்டக் கருத்திட்டம் (ஜய்க்கா)

## 2. அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு

தயவு செய்து இணைப்பு இலக்கம் 01 ஐப் பார்க்கவும். (பக்கம் இலக்கம் 31)

# 3. துறைசார் செயற்திறன்

## 3.1 நிர்வாகப் பிரிவு

நிர்வாகக் கிளை, திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் கிளை இப்பிரிவின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

### 3.1.1 நிர்வாகக் கிளை

**பொறுப்பு**

உரிய பணிகளை வினைத்திறனாகவும், விரைவிலும், தரமாகவும் மற்றும் தொடர்ச்சியாகவும் அரசின் சட்ட திட்டங்கள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு அமைவாக நிறைவேற்றுதல்.

### கிளையினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்

அமைச்சு உத்தியோகத்தர்களினதும், அமைச்சரின் பதவியணி உத்தியோகத்தர்களின் சகல நிர்வாகச் செயற்பாடுகள், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் நிறைவேற்றப்பட வேண்டிய சகல தாபனச் செயற்பாடுகள்.

**அமைச்சின் பதவியணியினர் தொடர்பிலான தகவல்கள்**

| தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | 2018.12.31 ஆந் திகதியன்றுள்ள ஆளணி | வெற்றிடங்கள்/மேலதிகம் (இருப்பின்) |
|---|---|---|---|
| சிரேஸ்ட நிலை மட்டம் | 39 | 31 | 08 (வெற்றிடங்கள்) |
| மூன்றாம் நிலை மட்டம் | 06 | 02 | 04 (வெற்றிடங்கள்) |
| இரண்டாம் நிலை மட்டம் | 96 | 84 | 12 (வெற்றிடங்கள்) |
| ஆரம்ப நிலை மட்டம் | 44 | 38 | 06 (வெற்றிடங்கள்) |
| **மொத்தம்** | **185** | **155** | **30** (வெற்றிடங்கள்) |

**அமைச்சின் பதவியணியினரின் மாற்றங்கள்**

| தொகுதி | 2018.12.31 ஆந்திகதிய | | | |
|---|---|---|---|---|
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற | இடமாற்றம் பெற்று வருகை தந்த | ஓய்வு பெற்ற | விலகிய |
| சிரேஸ்ட நிலை மட்டம் | 04 | 04 | 04 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | - | - | 01 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 11 | 06 | 01 | - |
| ஆரம்ப நிலை மட்டம் | 06 | - | - | - |
| **மொத்தம்** | **21** | **10** | **06** | **-** |

**பயிற்சியளித்தல்**

- **உள்ளூர் பயிற்சி**

| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | அமைச்சு ஈடுசெய்துள்ள மொத்தச் செலவு (ரூபா.) |
|---|---|---|
| 22 | 102 | 10,59,800.00 |

- **உள்ளூர் பயிற்சி - பயிற்சி, வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள்**

| # | பெயர் மற்றும் பதவி | கலந்து கொண்ட நிகழ்ச்சித் திட்டம்/பாடநெறி | காலவரையறை |
|---|---|---|---|
| 1 | திருமதி. பீ. எதிரிசிங்க - சிரேஸ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | அரச ஆவணங்களை நிர்வகித்தல் மற்றும் ஆவணப் பராமரிப்புச் சட்டம் தொடர்பிலான ஒருநாள் பாடநெறி. | 2018.03.20 |
| | | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான கொள்முதல் நடைமுறை | 2018.07.06, 13, 20 |
| 2 | திருமதி. ஜீ.சீ. கன்னோறுவ - பணிப்பாளர் (மாநகரத் திட்டமிடல்) | | |

| # | பெயர் மற்றும் பதவி | கலந்து கொண்ட நிகழ்ச்சித் திட்டம்/பாடநெறி | காலவரையறை |
|---|---|---|---|
| 3 | திருமதி. ஜெ.எம். திசானாயக்க - உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தினை ஒருங்கிணைத்தல். | 2018.11.07, 08 |
| | | கருத்திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல். | 2018.09.26 மற்றும் 2018.10.27 |
| 4 | செல்வி. பிரியங்கா சேனாரத்ன, உதவிப் பணிப்பாளர் (மாநகரத் திட்டமிடல்) | கருத்திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல். | 2018.09.26 மற்றும் 2018.10.27 |
| | | அரச கொள்முதல் முகாமைத்துவம் | 2018.03.07, 09 |
| 5 | செல்வி. அய்.கே.டபிள்யு.என். விக்ரமரத்ன - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான கொள்முதல் நடைமுறை | 2018.07.06, 13, 20 |
| 6 | செல்வி. ஜீ.ரீ. பெரேரா - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான கொள்முதல் நடைமுறை | |
| | | கருத்திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல். | 2018.09.26, 27 |
| 7 | திருமதி. சத்துரி விஜேசுந்தர - உதவிப் பணிப்பாளர் (காணி) | நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான கொள்முதல் நடைமுறை | 2018.07.06,13, 20 |
| 8 | திருமதி. றேணுகா தர்சனி கல்தேரா - நிர்வாக உத்தியோகத்தர் (பதில்) | ஒழுக்காற்று நடைமுறை | 2018.12.13, 20 - 27 |
| 9 | திருமதி. கே.ஏ.எஸ். புஸ்பமாலி - அபிவிருத்தி உத்தியோகத்தர் | அரச பிரிவினுள் உள்ளகக் கணக்காய்வு | 2018.02.07, 08 |
| 10 | திரு. கே.ஏ.டி. ஜயதிஸ்ஸ - அபிவிருத்தி உத்தியோகத்தர் | தொழில் திறன் மற்றும் தொழில் முறை கையாளுதல். | 2018.09.26 |
| 11 | திருமதி. ஜே.ஏ. இறோசா லக்மாலி - அபிவிருத்தி உத்தியோகத்தர். | உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை. | 2018.09.10, 11 |
| | | உள்ளகக் கணக்காய்வு | 2018 செப்ரெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் 06 தினங்கள். |
| 12 | திருமதி. ரீ.ஏ.ஈ. லக்மாலி - அபிவிருத்தி உத்தியோகத்தர். | உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை. | 2018.09.10, 11 |
| 13 | திரு. பீ.கே.ஈ.டி. சேனாரத்ன - அபிவிருத்தி உத்தியோகத்தர் | அரச பிரிவினுள் உள்ளகக் கணக்காய்வு | 2018.06.20 - 22 |
| | | உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை. | 2018.09.10, 11 |
| | | உள்ளகக் கணக்காய்வு | 2018.09-10 மாதங்களில் 06 தினங்கள். |
| 14 | திருமதி. பீ.பீ. பத்திரண - அபிவிருத்தி உத்தியோகத்தர். | பிரத்தியேகக் கோவையினை விளைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லுதல். | 2018.10.12 |
| 15 | திருமதி. வருணி கத்தரசிங்க - அபிவிருத்தி உத்தியோகத்தர் | உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை. | 2018.09.10, 11 |
| | | உள்ளகக் கணக்காய்வு | 2018.09-10 மாதங்களில் 06 தினங்கள். |
| 16 | திருமதி. சீ.கே. முணசிங்க - அபிவிருத்தி உத்தியோகத்தர் | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | 2018.09.13, 14 |
| 17 | திரு. அனுர குமார செநெவிரத்ன - அபிவிருத்தி உத்தியோகத்தர் | கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் விடையளித்தல். | 2018.10.22, 23 |
| 18 | செல்வி. ஆர்.கே.டி.கே. ரணமுக்க - முகாமைத்துவ உதவியாளர். | அரச பிரிவினுள் உள்ளகக் கணக்காய்வு | 2018.02.07, 08 |
| 19 | திருமதி அய்.டி. பெரேரா - அபிவிருத்தி உத்தியோகத்தர் | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | 2018.09.13, 14 |
| 20 | திருமதி. ஈ.ஆர்.என். ஏக்கநாயக்க - அபிவிருத்தி உத்தியோகத்தர். | | |
| 21 | செல்வி. உதானி இசங்கா - முகாமைத்துவ உதவியாளர். | கணக்கீட்டுப் பொறுப்பு மற்றும் நடைமுறைப் பயன்பாடு. | 2018.08.16, 17 |
| 22 | திரு. எச்.என்.எம்.எம். கத்துறுசிங்க - முகாமைத்துவ உதவியாளர். | உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை. | 2018.09.10, 11 |

| # | பெயர் மற்றும் பதவி | கலந்து கொண்ட நிகழ்ச்சித் திட்டம்/பாடநெறி | காலவரையறை |
|---|---|---|---|
| 23 | செல்வி. எச்.பீ.பீ.எச். திசானாயக்க - முகாமைத்துவ உதவியாளர். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | 2018.10.18, 19 |
| | | பிரத்தியேகக் கோவையினை விளைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லுதல். | 2018.10.12 |
| 24 | செல்வி. என்.யூ. மலகல - முகாமைத்துவ உதவியாளர். | உதவிப் பதவியணியினர் தொடர்பிலான கொள்முதல் நடைமுறை. | 2018.09.10, 11 |
| 25 | செல்வி. எம்.ஜெ.ஏ.டீ.எச்.சீ. ஜயசுந்தர - முகாமைத்துவ உதவியாளர். | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | 2018.08.02, 03 |
| | | கணக்கீட்டுப் பொறுப்பு மற்றும் நடைமுறைப் பயன்பாடு. | 2018.08.16, 17 |
| 26 | செல்வி. எல்.என். அமரசிங்க - முகாமைத்துவ உதவியாளர். | பிரத்தியேகக் கோவையினை விளைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லுதல். | 2018.10.12 |
| | | விடுமுறை எழுதுவினைஞர்களின் கடமைப் பொறுப்பு. | 2018.03.19, 20 |
| 27 | திருமதி. எல்.கே.ஜீ.எஸ். ஜயந்தி - முகாமைத்துவ உதவியாளர். | ஒழுக்காற்று நடைமுறை | 2018.09.18, 20 |
| 28 | திருமதி. ஜீ.கே. பிரியங்கா மல்காந்தி - முகாமைத்துவ உதவியாளர். | தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவம். | 2018.08.07 |
| 29 | திருமதி. றசாஞ்சலி வர்ணசூரிய - முகாமைத்துவ உதவியாளர். | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | 2018.09.13, 14 |
| | | விடுமுறை எழுதுவினைஞர்களின் கடமைப் பொறுப்பு. | 2018.03.19, 20 |
| 30 | திருமதி. டபிள்யு.ஏ.ஆர்.எம். விக்ரமசிங்க - முகாமைத்துவ உதவியாளர். | அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரமாணம் | 2018.09.11, 14 |
| 31 | செல்வி. டீ.ஜீ.எம்.எச். குணவர்தன - முகாமைத்துவ உதவியாளர் | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் தொடர்பில் அரச உத்தியோகத்தர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டம். | 2018.03.22, 23 |
| | | பிரத்தியேகக் கோவையினை விளைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லுதல். | 2018.10.12 |
| 32 | செல்வி. டீ.டீ. மஞ்சனாயக்க - முகாமைத்துவ உதவியாளர் | பிரத்தியேகக் கோவையினை விளைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லுதல். | 2018.03.29 |
| | | கணக்கீட்டுப் பொறுப்பு மற்றும் நடைமுறைப் பயன்பாடு. | 2018.08.16 ,17 |
| 33 | திருமதி. நயனா எதிரிசிங்க - முகாமைத்துவ உதவியாளர் | களஞ்சிய முகாமைத்துவம் | 2018.09.20 மற்றும் 2018.10.01 |
| 34 | திருமதி. பீ.வீ.எஸ். பிரபாசா பாதுக்க - முகாமைத்துவ உதவியாளர். | பிரத்தியேகக் கோவையினை விளைத்திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லுதல். | 2018.03.29 |
| | | கணக்கீட்டுப் பொறுப்பு மற்றும் நடைமுறைப் பயன்பாடு. | 2018.08.16 ,17 |
| 35 | அமைச்சின் பதவியணியினர் | தமிழ்மொழி வாய்மூலப் பயிற்சிப் பாடநெறி | 2018.02.02 ஆந் திகதியிலிருந்து வெள்ளிக்கிழமை தினங்களில் (06 மாதங்கள் வரையான பாடநெறி) |
| 36 | அமைச்சின் சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையின் பதவியணியினர் தொடர்பில். | தமிழ் மொழித் திறன் செய்முறைப் பயிற்சிப் பாடநெறி - 50 மணித்தியாலம். | 2018.02.17 ஆந் திகதியலிருந்து நாளொன்றுக்கு 04 மணித்தியாலம் வீதம் (50 மணித்தியாலத்தினை உள்ளடக்குமாறு) |
| 37 | அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்களுக்காக. | கடிதங்களைக் கோவையிடுதல் | 2018.06.19 |
| | | தாபன விதிக்கோவை | 2018.06.22 |

- **வெளிநாட்டுப் பயிற்சி**

| நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கலந்து கொண்ட நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | கலந்து கொண்ட ஏனைய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | அமைச்சு ஈடு செய்துள்ள மொத்தச் செலவு ரூபா. |
|---|---|---|---|
| 31 | 22 | 04 | 5,074,355.49 |

- **2018 வெளிநாட்டுப் பயிற்சிகள் - நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் தூதுவர் சேவை**

| # | பெயர் மற்றும் பதவி | பாடநெறி/வேலைத்திட்டம் | நாடு | காலவரையறை |
|---|---|---|---|---|
| 1 | எந்திரி. திரு. என். ரூபசிங்க - செயலாளர் | கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் - தூதுவர் சேவை | சீனா | 2018.09.01-11 |
| | | உமாஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம். | ஈரான் | 2018.09.28 - 2018.10.04 |
| 2 | திரு. எஸ்.எம். பியதிஸ்ஸ - மேலதிக செயலாளர் (நிர்வாகம்) | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்பில் நிதிசார் மூலோபாயங்கள் தொடர்பிலான கருத்தரங்கு. | சீனா | 2018.07.11 -17 |
| | | கௌரவ அமைச்சருடன் முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | இங்கிலாந்து | 2018.10.17 -19 |
| 3 | திரு. டபிள்யு.எம்.கே.பீ.எஸ். ஆர். பிரனாந்து - மேலதிக செயலாளர் (தொழில்நுட்பம்) | மாநகர அபிவிருத்தி தொடர்பிலான முதலீட்டு விஞ்ஞாபனம் | பிரான்ஸ் | 2018.07.01- 06 |
| | | கொள்கை வகுப்பாளர்கள் தொடர்பிலான நிலைபேறான மேம்படுத்தப்பட்ட சுகாதார மூலோபாயம் தொடர்பில் தலைமைத்துவ ஆற்றலினைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம். | சிங்கப்பூர் | 2018.07.11- 13 |
| | | குப்பை லொறிகள், இரசாயனப் பொருட்களைத் தெளிக்கும் லொறிகள் மற்றும் பெக்கோ - ஏற்றுவதற்கு முன்னர் பரிசோதித்தல். | சீனா | 2018.11.28 - 2018.12.09 |
| 4 | திரு. மாதவ வைத்யரத்ன - மேலதிக செயலாளர் (மாநகரம்) | 19 வது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பூங்கா நிகழ்ச்சித் திட்டம் | கொரியா | 2018.06.18 -29 |
| | | இலங்கை பொருளாதார மற்றும் முதலீட்டுக் கூட்டிணைப்பு - 2018 | சீனா | 2018.09.18 |
| | | நூறாண்டு சவால்கள் தொடர்பில் நிறுவனக் கூட்டமைப்பின் இணக்கப்பாடு. | ஐக்கிய அமெரிக்கக் குடியரசு | 2018.10.01-05 |
| 5 | திருமதி. எஸ்.கே.ஏ.பீ.தேவராஜா - மேலதிக செயலாளர் (மாநகரத் தொழில்நுட்பம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி) | கொழும்பு துறைமுக நகரக் கருத்திட்டம் - வெளிக்களச் சுற்றுலா | சீனா | 2018.01.12-17 |
| | | விசேட அமெரிக்க வர்த்தக உள்ளகப் பயிற்சி மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம். | ஐக்கிய அமெரிக்கக் குடியரசு | 2018.04.14-28 |
| | | நகர அபிவிருத்திக்கு நிதித் தீர்வுகள் | தாய்லாந்து | 2018.07.09-13 |
| 6 | திருமதி. எஸ்.ஆர்.பீ.ஆர்.ஜீ.சீ. கன்னொறுவ - பணிப்பாளர் (மாநகரத் திட்டமிடல்) | குவைட் - இலங்கை வர்த்தகம் தொடர்பிலான கூட்டுச் சபையின் இரண்டாவது அமர்வு. | குவைட் | 2018.10.09-11 |
| 7 | திருமதி. கே.எஸ். முரமுதலிகே - பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | திறன் விருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - கற்கை ஆய்வுச் சுற்றுலா | மலேசியா | 2018.10.08-12 |

| # | பெயர் மற்றும் பதவி | பாடநெறி/வேலைத்திட்டம் | நாடு | காலவரையறை |
|---|---|---|---|---|
| 8 | திருமதி. என்.சீ. பட்டுகெதர - பணிப்பாளர் (நகர அபிவிருத்தி) | திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் - வெளிக்களச் சுற்றுலா | சீனா | 2018.04.20-25 |
| | | ஆரோக்கியமான மற்றும் நட்பு நகர அபிவிருத்தி | | 2018.11.21-22 |
| 9 | திருமதி. எஸ்.டீ. சிறியாலதா - பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | அரச துறையின் உள்ளகக் கணக்காய்வாளர்கள் தொடர்பில் முகாமைத்துவ கணக்காய்வு தொடர்பிலான சர்வதேச நிகழ்ச்சித் திட்டம். | மலேசியா | 2018.01.16-23 |
| | | திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - கற்கை ஆய்வுச் சுற்றுலா | இந்தியா | 2018.09.09-15 |
| 10 | திரு. எச்.பீ.எல். குமார - பிரதான கணக்காளர் | உலகளாவிய கொள்முதல் மகாநாடு - 2018 | இந்தியா | 2018.02.08-09 |
| | | திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் - வெளிக்களச் சுற்றுலா | சீனா | 2018.04.20-25 |
| 11 | திருமதி. நெரஞ்சா ஆர், நிசங்க - பிரதான கணக்காளர் | உலகளாவிய கொள்முதல் மகாநாடு - 2018 | இந்தியா | 2018.02.08-09 |
| | | உலக வங்கி உதவியுடனான கருத்திட்டங்களுக்கு கொள்முதல் நடைமுறை தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | | 2018.02.12-23 |
| | | திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - கற்கை ஆய்வுச் சுற்றுலா | | 2018.12.03-08 |
| 12 | திருமதி. அனோஜா கேரத் - பணிப்பாளர் (சுற்றாடல்) | கொழும்பு துறைமுக நகரக் கருத்திட்டம் - கற்கை ஆய்வுச் சுற்றுலா | சீனா | 2018.01.12-17 |
| | | திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - கற்கை ஆய்வுச் சுற்றுலா | மலேசியா | 2018.10.14-20 |
| | | நகர்ப்புற வளி மாசடைதல் தொடர்பிலான பிராந்திய மாநாடு | | 2018.11.13-16 |
| 13 | திருமதி. ஜெ.எம். திசானாயக்க - உதவிச் செயலாளர் (நிர்வாகம்) | பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் இயற்கைக் காப்பு முகாமைத்துவம் தொடர்பிலான மாநாடு. | சீனா | 2018.09.01-21 |
| 14 | திருமதி. என்.ஜீ.பீ.ஜி. சமரவிக்ரம - உதவிச் செயலாளர் (தாபனம்) | அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் திட்டமிடல் தொடர்பிலான மாநாடு - 2018 | | 2018.04.10-30 |
| 15 | செல்வி. பிரியங்கா சேனாரத்ன - உதவிப் பணிப்பாளர் (மாநகரத் திட்டமிடல்) | முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு நிதியிடுதல் தொடர்பிலான சுற்றுச்சூழல் மற்றும் சமூக விடயங்களைக் கவனத்திற் கொள்ளும் நிகழ்ச்சித் திட்டம். | ஜப்பான் | 2018.11.06-29 |
| 16 | செல்வி. அய். கே.டபிள்யு.என். விக்ரமரத்ன - உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | நகர சேவைகளை திட்டமிடுதல் மற்றும் முகாமை செய்தல். | இந்தியா | 2018.01.15 - 2018.03.09 |
| 17 | செல்வி. என்.ஜீ.ரீ. பெரேரா -உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்) | வறுமையினைக் குறைத்தல் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் பங்கேற்புத் திட்டம் | | 2018.02.21 - 2018.03.20 |
| 18 | திரு. எம்.எஸ். ரத்னசிங்க - உதவிப் பணிப்பாளர் (நகர அபிவிருத்தி) | அரச துறையின் கொள்முதல் முகாமைத்துவம் | இத்தாலி | 2018.09.24 - 2018.10.12 |

| # | பெயர் மற்றும் பதவி | பாடநெறி/வேலைத்திட்டம் | நாடு | காலவரையறை |
|---|---|---|---|---|
| 19 | திருமதி. எல்.பீ. கொஸ்த்தா - உதவிப் பணிப்பாளர் (நகரக் காணி முகாமைத்துவம்) | கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் - தூதுவர் சேவை | சீனா | 2018.09.01-11 |
| 20 | திருமதி. டி.என். அத்துக்கோரள - உதவிப் பணிப்பாளர் (காணி மற்றும் திட்டமிடல்) | | | |
| 21 | திருமதி. டபிள்யு.எம்.சீ.கே. விஜேசுந்தர - உதவிப் பணிப்பாளர் (காணி) | ஆசியப் பிராந்தியத்தினுள் நிலைபேறான மற்றும் நம்பகமான சேவை வழங்கும் திட்டமொன்றினைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம். | ஜப்பான் | 2018.05.13 - 2018.06.09 |
| 22 | திரு. எஸ்.எஸ்.எஸ்.டீ. சமரசிங்க - கணக்காளர் | அரச பிரிவினூடாக பாதீட்டினை வழங்குதல், கணக்கீடு மற்றும் நிதி முகாமை. | இந்தியா | 2018.01.15 - 2018.02.02 |
| | | பல் ஊடக நிலையங்களின் செயற்பாடுகள் தொடர்பிலான பயிற்சிகள் மற்றும் கற்கை ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள். | மலேசியா, ஜப்பான் | 2018.11.18-24 |
| 23 | திரு. எல்.எச்.டீ. ஜயந்த - அபிவிருத்தி உத்தியோகத்தர். | உலக வங்கி உதவியுடனான கருத்திட்டங்கள் தொடர்பில் கொள்முதல் நடைமுறை தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம். | இந்தியா | 2018.02.12-23 |
| 24 | திரு. பீ.கே.பிரேமகுமார - அபிவிருத்தி உத்தியோகத்தர். | அபிவிருத்தியடைந்த நாடுகள் தொடர்பில் வீடமைப்பு நிவாரண உதவிகளை வழங்குதல். | சீனா | 2018.11.14-24 |
| 25 | திரு. டபிள்யு.ஏ.என். டி கொஸ்தா - அபிவிருத்தி உத்தியோகத்தர். | திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் - வெளிக்களச் சுற்றுலா | சீனா | 2018.04.20-25 |
| 26 | திருமதி. ஆர்.கே.சீ.பீ. குணவர்தன - அபிவிருத்தி உத்தியோகத்தர் | பல் ஊடக நிலையங்களினைச் செயற்படுத்தல் தொடர்பிலான பயிற்சி மற்றும் கற்கை ஆய்வு நிகழ்ச்சித் திட்டம். | மலேசியா. ஜப்பான். | 2018.11.18-24 |

### 3.1.2 திட்டமிடல் மற்றும் செயற்பாட்டுக் கிளை

#### பொறுப்பு

நாட்டிற் காணப்படும் அபிவிருத்தி மூலோபாயங்களுக்கும், அமைச்சின் கொள்கைகளுக்கும் இணங்க அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை இனங்காணுதல், திட்டங்களைத் தயாரித்தல், கண்காணிப்பு, முன்னேற்ற மீளாய்வு மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

#### கிளையினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்.

- அமைச்சு சார்பில் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் உரிய கண்காணிப்பு நிறுவனங்களுக்கு அவற்றினை முன்வைத்தல்.
- வருடாந்த திட்டத்தினை அமுலாக்கும் முன்னேற்றத்தினை கண்காணித்தல் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு அது தொடர்பில் அறிக்கைகளினை இடுதல்.
- அமைச்சின் இணைந்த நிறுவனங்களின் திட்டம், செயற்படுத்தல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுச் செய்றபாடுகளை ஒருங்கிணைத்தல்.

- உள்ளூர் நிதியினை அடிப்படையாகக் கொண்டு அமைச்சு மற்றும் இணை நிறுவனங்களினால் முன்வைக்கப்படும் கருத்திட்டப் பிரேரணைகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளுதல் மற்றும் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- வருடாந்த செயற்திறன் அறிக்கை மற்றும் பாதீட்டு விவாதம் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கு அமைச்சின் முன்னேற்ற அறிக்கையினைத் தயாரித்தல்.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எட்டச் செய்தல் தொடர்பில் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- காலநிலை மாற்றத்தினைக் குறைத்தல் மற்றும் தொடர்புபடும் உரிய நிறுவனங்களுடன் தேவையான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- தகவல் சட்டத்துடன் தொடர்புபட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள்.
- தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வினை முன்னெடுத்தல்.
- அரச பிரத்தியேகக் கூட்டாண்மையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் கருத்திட்டங்களின் தகவல்களைத் திரட்டுதல் மற்றும் நாளதுவரைப்படுத்துதல்.
- அமைச்சின் கீழ் மாவட்ட மட்டத்தில் அமுலாக்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்களின் தவல்களைத் திரட்டுதல் மற்றும் நாளதுவரைப்படுத்தல்.

### 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

- 2018 ஆம் ஆண்டின் அமைச்சின் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் உரிய நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட காலவரையறையினுள் முன்வைத்தல்.
- பாராளுமன்றத்திற்கு முன்வைப்பதற்கு "வருடாந்த செயற்திறன் அறிக்கை – 2017" ஐத் தயாரித்தல்.
- 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நாடுபூராவும் அமுலாக்குவதற்கு எதிர்பார்த்துள்ள பல்வேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் சார்பில் நகர அபிவிருத்தி அதிகார சபை முன்வைத்துள்ள கருத்திட்டப் பிரேரணைகள் 116 மற்றும் இலங்கை காணி மீட்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் முன்வைத்துள்ள கருத்திட்ட பிரேரணைகள் 14 தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- அமைச்சு மற்றும் அதன் இணை நிறுவனங்கள், கருத்திட்டங்களினூடாக முன்னெடுத்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் தொடர்பில் 13 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டமை.
- அமைச்சின் வருடாந்த திட்டத்தினை அமுலாக்குதல் தொடர்பில் பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றத்தினை (காலாண்டு ரீதியில்) ஜனாதிபதி செயலகம், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்பு திணைக்களம் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- இலங்கை மத்திய வங்கியின் "வருடாந்த அறிக்கை – 2017" மற்றும் "அரையாண்டு அறிக்கை – 2018" இல் உள்ளடக்குவதற்கு இவ் அமைச்சுக்குரிய தகவல்களை இலங்கை மத்திய வங்கிக்கு முன்வைத்தல்.
- அமைச்சுடன் தொடர்பிலான "தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வு – 2017" முன்னெடுத்து தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு முன்வைத்தல்
- பாதீட்டு மதிப்பீடு – 2019 ஐத் தயாரிப்பதற்கு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை எட்டச் செய்வதற்கு அமைச்சினூடாக அமுலாக்கப்படும் பிரதான கருத்திட்டங்களின் பங்களிப்பு தொடர்பிலான தரவுகள் மற்றும் தகவல்களை தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- "அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - 2018/2021" த்திற்கு, உரிய அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கையினை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- தேசிய ரீதியில் வரையறுக்கப்பட்ட பங்களிப்பு தொடர்பிலான மீளாய்வுக்கு, நகரத் திட்டமிடல் மற்றும் மனித குடியேற்றப் பிரிவின் முன்னேற்றத்தினை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு முன்வைத்தல்.
- காலநிலை மாற்றத்தினைக் குறைத்தல் தொடர்பில் பங்களிப்பினை வழங்கும் கருத்திட்டப் பிரேரணைகள் 03 (போக்குவரத்துப் பிரிவு தொடர்பில்) மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு முன்வைத்தல்.

- காலநிலை மாற்றத்தின் மீது நேரடித் தாக்கத்தினைச் செலுத்துகின்ற இவ் அமைச்சின் கீழ் அமுலாக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்/கருத்திட்டங்களின் முன்னேற்றத்தினை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு முன்வைத்தல்.
- நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் இடம்பெற்றுள்ள கருத்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள கருத்திட்டங்களின் தகவல்களினை, நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன விலங்கு அமைச்சுக்கு முன்வைத்தல்.
- அரச பிரத்தியேகக் கூட்டாண்மையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் கருத்திட்டங்கள் தொடர்பிலான தகவல்களை அரச நிதித் திணைக்களத்திற்கு முன்வைத்தல்.
- கோருகின்ற வேளையில், அமைச்சினூடாக மாவட்ட மட்டத்தில் அமுலாக்கப்பட்டு வரும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான தகவல்களை உரிய மாவட்டச் செயலாளர்களுக்கு முன்வைத்தல்.

## 3.2 கணக்குகள் பிரிவு

### பொறுப்பு

அமைச்சு தொடர்பில் பாதீட்டு மதிப்பீட்டினூடாக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு வரையறையினூடாக உரிய செலவுகளை ஈடுசெய்தல், முன்னேற்ற மீளாய்வு. நிதி நிலபரம் தொடர்பிலான கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வுக்கு முன்வைத்தல்.

### பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்

- அமைச்சினதும், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினதும் மற்றும் வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பிலான வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்து தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு முன்வைத்தல் மற்றும் வருடாந்த பாதீட்டினூடாக ஒதுக்கப்படும் ஒதுக்கிட்டு வரையறையினூடாக செலவுகளை முகாமை செய்து அமைச்சின் கடமைப் பொறுப்பினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவியினை வழங்குதல்.

- பொதுத் திறைசேரிக்கு முன்வைக்கப்பட வேண்டிய பின்வரும் அண்மைய அறிக்கைகளை, உரிய காலவரையறைகளுக்கமைய முன்வைத்தல்.

| அறிக்கை | காலவரையறை |
|---|---|
| வருடாந்தக் கொள்முதல் திட்டம் | உரிய வருட ஆரம்பத்தில் |
| வருடாந்தக் கட்டுநிதிப் பத்திரம் | வருடத்தின் கடமையாற்றும் முதலாவது தினத்தில் |
| வருடாந்தக் கட்டுநிதித் திட்டம் | வருட ஆரம்பத்தில் |
| வருடாந்தப் பாதீடு | சுற்றுநிரூபங்களின் பிரகாரம் முன்வைத்தல் |
| வங்கிக் கணக்குகள் தொடர்பிலான மாதாந்த அறிக்கை | உரிய மாத அறிக்கையினை அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் |
| வைப்புக் கணக்குகள் தொடர்பிலான காலாண்டு அறிக்கை | உரிய காலாண்டு நிறைவு பெற்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் |
| காலாண்டு கட்டுநிதிநியினை இணக்கஞ் செய்யும் அறிக்கைகள் | உரிய காலாண்டு நிறைவு பெற்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர். |
| வருடாந்த கட்டுநிதியினைக் கோரும் படிவம் | ஒவ்வொரு மாதமும் கடமையாற்றும் முதலாவது தினம். |
| மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்கள் | உரிய மாதத்தின் கணக்கு அறிக்கைகளை அடுத்து வரும் மாதத்தின் ஐந்தாம் திகதி அல்லது அதற்கு முன்னர். |

- கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட வேண்டிய அறிக்கைகள்
  - வருடாந்தக் கணக்கு அறிக்கைகள் - உரிய வருடத்தின் கணக்கு அறிக்கைகளை அடுத்து வரும் வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர்.
  - அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் “பீ” கணக்கு - உரிய வருடத்தின் கணக்கு அறிக்கைகளை அடுத்து வரும் வருடத்தின் பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர்.

- திறைசேரியுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுத்து வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் மற்றும் ஏனைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் கட்டுநிதியினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அந்நிதியினைக் கருத்திட்டங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல்.
- வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் கொடுப்பனவுகளுக்கான உரிய கோரிக்கைப் படிவங்களினை, திறைசேரியினூடாக, இலங்கை மத்திய வங்கிக்கு முன்வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- நிதிச்செயற்பாடுகளை முறைசார் வகையில் முன்னெடுத்துச் செல்லுதல், நிதிப் பிரமாணங்கள், திறைசேரி சுற்றுநிரூபங்கள் மற்றும் கட்டளைகளுக்கமைவான கொடுப்பனவுகள், பெறுவனவுகளை கணக்கிடுதல் மற்றும் திறைசேரிக்கு அறிக்கையிடுதல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள், வெளிநாட்டுக் கருத்திட்டங்களின் பொருட் கணக்கெடுப்பு ஆய்வுச் செயற்பாடுகளினை ஒருங்கிணைத்தல், உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- கொன்றோலர் நாயகத்திற்கு உரிய அறிக்கைகளை வழங்குதல் மற்றும் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களினால் அனுப்பப்படவேண்டிய அறிக்கைகளின் முன்னேற்றத்தினை உறுதிசெய்து கொள்ளுதல்.
- அமைச்சின் கொள்முதல் செயற்பாடுகள்
- கணக்காய்வு விசாரணைகள் தொடர்பில் உரிய பிரிவுகளுடன் ஒருங்கிணைப்பினைச் செய்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு விடைகளினை வழங்குதல்.

### 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம் 

தலைப்பு இலக்கம் : 162
அமைச்சின் மீண்டுவரும் செலவுகள்
தொகுதி - ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் ஏனைய மீண்டுவரும் செலவுகள்

(ரூ.மி.)

| விபரம் | ஒதுக்கீடுகள் | மொத்தச் செலவு | சதவீதம் % |
|---|---|---|---|
| அமைச்சர் அலுவலகம் | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 13.25 | 11.28 | 85% |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 25.75 | 23.32 | 91% |
| **மொத்தம்** | **39.00** | **34.60** | **89%** |
| தாபனம் மற்றும் நிர்வாகச் சேவைகள் | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 89.50 | 86.56 | 97% |
| ஏனைய மீண்டுவரும் செலவுகள் | 780.69 | 583.88 | 75% |
| **மொத்தம்** | **870.19** | **670.44** | **77%** |
| **முழுமொத்தம்** | **909.19** | **705.04** | **78%** |

**மூலதனச் செலவுகள் (புனருத்தாபனம் மற்றும் கையகப்படுத்துதல்)**

(ரூ.மி.)

| விபரம் | ஒதுக்கீடுகள் | மொத்தச் செலவு | சதவீதம் % |
|---|---|---|---|
| அமைச்சர் அலுவலகம் | | | |
| புனருத்தாபனம் | 1.60 | 0.97 | 61% |
| கையகப்படுத்தல் | 1.70 | 1.18 | 69% |
| மொத்தம் | 3.30 | 2.15 | 65% |
| தாபனம் மற்றும் நிர்வாகச் சேவைகள் | | | |
| புனருத்தாபனம் | 1.80 | 1.22 | 68% |
| கையகப்படுத்தல் | 3.90 | 3.56 | 91% |
| திறன் விருத்தி | 1.06 | 1.06 | 100% |
| **மொத்தம்** | **6.76** | **5.84** | **86%** |
| **முழுமொத்தம்** | **10.06** | **7.99** | **79 %** |

## நகர உட்கட்டமைப்வு வசதி மேம்பாடு தொடர்பிலான மூலதனச் செலவு

(ரூ.மி.)

| விபரம் | | ஒதுக்கீடுகள் | செலவு | கையளிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் | 2018 ஆம் ஆண்டில் நிலவிய அரசியல் நெருக்கடியின் காரணத்தினால் எட்ட இயலாதுபோயுள்ள நிதிசார் பெறுமதிகள் | மொத்தம் | சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **மொத்தம்** | | **60,162.85** | **31,408.29** | **13,322.83** | **3,127.00** | **47,858.12** | **80%** |
| நகர அபிவிருத்தி அதிகார சபை | | 1,519.00 | 636.00 | 834.54 | - | 1,470.54 | 97% |
| இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம். | | 2,873.00 | 1,030.88 | 1,432.56 | - | 2,463.44 | 86% |
| ஹம்பாந்தோட்டை சர்வதேச மகாநாட்டு நிலையம் | | 33.80 | 33.79 | - | - | 33.79 | 100% |
| பாரிய கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம். | உலக வங்கி | 5,890.00 | 2,693.03 | - | 783.00 | 3,476.03 | 59% |
| | இலங்கை அரசு | 1,266.00 | 1,200.36 | - | - | 1,200.36 | 95% |
| கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (3K) | | 616.50 | 612.00 | - | - | 612.00 | 99% |
| மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (காலி மற்றும் கண்டி) | உலக வங்கி | 3,100.00 | 1,976.88 | - | - | 1,976.88 | 64% |
| | இலங்கை அரசு | 480.00 | 465.66 | - | - | 465.66 | 97% |
| பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம். | | 4,908.20 | 3,523.77 | - | - | 3,523.77 | 72% |
| மெனிங் சந்தையினை மீளமைத்தல் - பாலியகொட. | | 1,510.00 | 1,508.32 | - | - | 1,508.32 | 100% |
| நகர அபிவிருத்தி சாதனங்கள் மற்றும் நகர திண்மக் கழிவு முகாமைத்துவம். | | 600.00 | 600.00 | - | - | 600.00 | 100% |
| பிரேரிக்கப்பட்ட மேல் மாகாணப் பிராந்திய மாநகர அதிகார சபைக் கருத்திட்ட அலுவலகங்களை ஸ்தாபித்தல். | | 384.00 | 297.03 | - | - | 297.02 | 77% |
| மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (அனுராதபுரம்) - இலங்கை அரசு | | 45.00 | 41.60 | - | - | 41.60 | 92% |
| துறைமுக நகர கருத்திட்டம் | | 3,335.00 | 3,255.13 | - | - | 3,255.13 | 98% |
| திருகோணமலை மாவட்டத்தின் பிரதான திட்டத்தினைத் தயாரித்தல். | | 80.35 | 80.24 | - | - | 80.24 | 100% |

| விபரம் | | ஒதுக்கீடுகள் | செலவு | கையளிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் | 2018 ஆம் ஆண்டில் நிலவிய அரசியல் நெருக்கடியின் காரணத்தினால் எட்ட இயலாதுபோயுள்ள நிதிசார் பெறுமதிகள் | மொத்தம் | சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| 9 மாகாணங்களினுள் நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (சுகித்த புரவர) | | 5,765.00 | 4,128.38 | - | - | 4,128.38 | 72% |
| கனமற்ற புகையிரத மாறுமிடக் கருத்திட்டம் | ஜய்க்கா | 2,080.00 | - | - | 2,080.00 | 2,080.00 | 100% |
| | இலங்கை அரசு | 135.00 | 95.27 | - | - | 95.27 | 71% |
| நகர மீளுருவாக்கக் கருத்திட்டம் | | 17,100.00 | 6,014.92 | 11,055.73 | - | 17,070.65 | 100% |
| பொதுப் போக்குவரத்துச் சேவையினை மேம்படுத்துவதற்கு பேரூந்து சேவைகளை மேம்படுத்துதல். | | 1,100.00 | 592.67 | - | - | 592.67 | 54% |
| கோமாகம பிரதேசத்தில் வீதி வசதிகளை மேம்படுத்துதல். (தொழில்நுட்ப நகர அபிவிருத்திக் கருத்திட்டம்) | | 100.00 | 48.39 | - | 264.00 | 312.39 | 312% |
| வேரஸ் கங்கையின் கழிவு நீரினை அகற்றுதல் மற்றும் சுற்றாடலினை மேம்படுத்தும் கருத்திட்டம். | | 1,873.00 | 1,277.37 | - | - | 1,277.37 | 68% |
| ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் பசுமைப் பூங்காவொன்றினை நிர்மாணிக்கும் கருத்திட்டம். | | 500.00 | 345.42 | - | - | 345.42 | 69% |
| நிர்வாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | | 16.00 | 10.16 | - | - | 10.16 | 64% |
| **ஆகக்குறைந்த நிதிசார் முன்னேறத்தினைக் கொண்ட கருத்திட்டங்கள் தொடர்பிலான விபரம்.** | | | | | | | |
| பாரிய கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் - வெளிநாட்டு மானியங்கள் | | 110.00 | 10.18 | ஆசிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் முதலீட்டு வங்கியினால் (AIIB) வழங்கப்பட்ட உதவி நிதி இடைநடுவே இரத்துச் செய்யப்படுதல். | | | |
| மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (யாழ்ப்பாணம்) | உலக வங்கி | 1,000.00 | 243.50 | AB 31 மற்றும் AB 21 வீதிகளுக்கான காணிகளைக் கையகப்படுத்தும் மற்றும் தீர்க்கும் செயற்பாட்டிற்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய காலமொன்று எடுத்தல் | | | |
| | இலங்கை அரசு | 350.00 | 73.90 | | | | |
| மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (அனுராதபுரம்) - உலக வங்கி. | | 300.00 | 82.14 | கருத்திட்டத்தின் திட்டச் செயற்பாடுகளுக்கு, தெரிவு செய்யப்பட்ட ஆலோசனைசார் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட வேண்டிய விரிவான திட்ட உருவாக்கம் மற்றும் அதனுடன் தொடர்பான விலைமனுவினைக் கோரும்போது ஏற்படும் தாமதம். | | | |

| ஆகக்குறைந்த நிதிசார் முன்னேறத்தினைக் கொண்ட கருத்திட்டங்கள் தொடர்பிலான விபரம். | | | |
|---|---|---|---|
| பேரா வாவியினைப் புனரமைக்கும் மற்றும் மீளமைக்கும் கருத்திட்டம். | 450.00 | 88.03 | கருத்திட்ட பிரதேசத்திலுள்ள குடியிருப்பாளர்களினை மீளமர்த்துவதற்கு புதிய வீடமைப்பு நிர்மாணிப்புச் செயற்பாடுகளை பூர்த்தி செய்தல். |
| போகம்பர சிறைச்சாலை அமைந்திருக்கும் காணியினை மீள அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம். | 200.00 | 70.39 | தொல்பொருளியல் திணைக்களத்தின் முழுமையான கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற கருத்திட்டமொன்று என்பதால் தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நேரிட்டமை மற்றும் உரிய காணியில் முன்னெடுத்துள்ள தற்காலிக பேரூந்துத் தரிப்பிடத்தினை அகற்றுவதற்கு காலம் எடுத்தமை. |
| காக்கை தீவு கருத்திட்டம் | 150.00 | 0.06 | காணியின் ஒழுங்கற்ற உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு முடியாமையின் காரணத்தினால் நிர்மாணப் பணிகள் நிறுத்தப்படுதல். |
| களுபாலம நீர்ப்பம்பி கருத்திட்டம் | 400.00 | - | இக்கருத்திட்டம் கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் இடம்பெறுவதால், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் இக்கருத்திட்டம் இரத்துச் செய்யப்படுதல். |
| நில்வள கருத்திட்டம் | 690.00 | 130.59 | கட்டடக்கலை ஆலோசனைசார் சேவைகளினை முன்னெடுத்த பிரத்தியேக நிறுவனம், அவற்றினை நிறைவேற்றுவதற்கு தாமதமாகியமை மற்றும் காணியினை மீட்பதற்குத் தேவையான சூழல்சார் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதில் இடம்பெற்ற தாமதம். |
| மாநகர அபிவிருத்தி கருத்திட்டத்தினை அமுலாக்குதல் மற்றும் காணியினைக் கையகப்படுத்துதல். | 400.00 | 0.86 | **கடல்சார் நகர அபிவிருத்திக் கருத்திட்டம்** – அரசியல் நெருக்கடியின் காரணத்தினால் சாத்தியவளக் கற்கைக்கான உடன்படிக்கையினை ஒப்பமிடுவதற்கு இயலாது போனமை.<br>**விமான நகர அபிவிருத்திக் கருத்திட்டம்** - காணியினைச் சுவீகரிக்கும் மற்றும் தீர்க்கும் செயற்பாடு நிறைவடையாமை.<br>**போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டம்** -<br>***கனமற்ற புகையிரத மாறுமிட திட்டக் கருத்திட்டத்தின் சாத்தியவளக் கற்கை ஆய்வு***<br>இது தொடர்பில் தெரிவு செய்யப்பட்ட புகையிரத வீதியான 52 கி.மீ. ஐ, கற்கை ஆய்வுப் பிரதேசம் 84 கி.மீ. வரை நீடிப்புச் செய்வதற்கு நேரிட்டுள்ளதால் இச்செயற்பாட்டினை 2019 மே மாதம் வரை நீடிப்புச் செய்தல்.<br>***பொல்துவ இடை வீதியினை நிர்மாணித்தல் (ரூ.583.6 மி.)***<br>இரண்டு அரச நிறுவனங்களுக்கிடையேயான ஒரு ஒப்பந்தம் என்றாலும் பிணையாளி ஒருவர் தேவை என தீர்மானிக்கப்பட்டதன் காரணத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் தேவையாகியுள்ளது. அரசியல் நெருக்கடியின்போது, பணிப்பாளர் சபை செயலற்றுப் போனமையின் காரணத்தினால் செயற்பாடுகள் தாமதமாகியமை. |
| நவீன நிலைபேறான நகர நிலையங்களை அபிவிருத்தி செய்தல். | 783.00 | 241.22 | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கருத்திட்டங்கள் தொடர்பில் அரச கொள்முதல் திட்டம் பின்பற்றப்பட்டுள்ளமையினால் ஒப்பந்தங்களை வழங்குதல் தாமதமாகியமை. அதேபோல, புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள்/நகர சபைகளின் கீழ் மீளவும் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நேரிட்டமை மற்றும் காணிகளைச் சுவீகரிக்கும் செயற்பாடுகள் தாமதமாகியமை. |
| நகர கருத்திட்டங்கள் தொடர்பில் வசதிகளை வழங்கும் கருத்திட்டம். | 20.00 | 0.16 | ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டமை. |

## 3.3 நகர அபிவிருத்திப் பிரிவு

நகர அபிவிருத்தி மற்றும் காணி என்ற கிளைகள், இப்பிரிவின் கீழுள்ளது.

## 3.3.1 நகர அபிவிருத்திக் கிளை

### கிளையின் பொறுப்பு

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தாகும் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ஏனைய கருத்திட்டங்களினூடாக இடம்பெற்றுவரும் நகர அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பிலான கொள்கைசார் தீர்மானங்களை எடுத்தல், சட்டரீதியில் அங்கீகாரத்தினை வழங்குதல், கருத்திட்டங்களை அமுலாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

### கிளையினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்

- சுகித்த புரவர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் திறந்த விலைமனுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறான கருத்திட்டங்கள் தொடர்பில், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினை நியமித்தல், அரச ஆலோசனை நிறுவனங்களினூடாக முன்வைக்கப்படும் விலைமனுக் கோரலுடன் தொடர்பிலான ஆவணங்களைப் பரீட்சித்தல், விலைமனுக்களைக் கோருதல், விலைமனுக்களை திறப்பதற்கு முன்னர் விலைமனுதாரர்களை விழிப்புணர்வூட்டும் கூட்டங்களைக் கூட்டுதல், விலைமனுக்களைத் திறத்தல், மதிப்பிடுதல், வழங்குதல், முன்னேற்ற மீளாய்வு, ஆலோசனை நிறுவனங்ளினூடாக அமைச்சுக்கு முன்வைக்கப்படும் பற்றுச்சீட்டுக்களைப் பரீட்சித்து நிதிக் கொடுப்பனவுக்கான உறுதிப் பத்திரங்களைத் தயாரித்து உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு கொடுப்பனவினைச் செய்வதற்காக கணக்குகள் பிரிவுக்கு முன்வைத்தல் மற்றும் தேவையான வேளையில் கருத்திட்டங்கள் தொடர்பில் சகல பங்குதாரர்களையும் அழைத்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களினை நடாத்துதல்.

- சுகித்த புரவர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், அமுலாக்கப்பட்டு வரும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிலுவையிலுள்ள கருத்திட்டங்களுக்கு உரிய அரச ஆலோசனை நிறுவனத்தினால் முன்வைக்கப்படும் செலவு மதிப்பீடுகளைத தயாரித்து கருத்திட்டங்களுடன் தொடர்பிலான அரச நிறுவனங்களுக்கு வழங்குதல் மற்றும் ஆலோசனை நிறுவனங்களினூடாக அமைச்சுக்கு முன்வைக்கப்படும் பற்றுச்சீட்டுக்களைப் பரீட்சித்து நிதிக் கொடுப்பனவினைச் செய்வதற்கு உரிய சான்றிதழ் பத்திரங்களைத் தயாரித்து உரிய ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவதற்கு கணக்குகள் பிரிவுக்கு முன்வைத்தல் மற்றும் தேவையானவேளைகளில் கருத்திட்டங்கள் தொடர்பில் தொடர்புபட்ட சகல பங்குதாரர்களையும் வரவழைத்து முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் மற்றும் அமைச்சின் கீழுள்ள பல்வேறான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் தொடர்பிலும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசங்களினைப் பிரகடனஞ் செய்தல், நகர அபிவிருத்தி திட்டங்களினைப் பிரகடனஞ் செய்தல் தொடர்பில் செயற்பாடுகளைக் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பிடுதல்.
- நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் தொடர்பிலான பொது முறைப்பாடுகள், பிரத்தியேக மற்றும் அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.
- சட்டவிரோத நிர்மாணங்கள் மற்றும் சட்டவிரோத குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளைக் கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பிடுதல்.

- ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களினூடாக, அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில், அமைச்சிடமிருந்து கோரப்பட்ட விடயங்கள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

- பாதீடு - 2018 இன் ஊடாக செலவு விபரம் 9 இன் கீழ், ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி சுகித்த புரவர நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முடிவுறாத (நிலுவையிலுள்ள) அபிவிருத்திக் கருத்திட்டங்கள் 122 மற்றும் 7 அரச நிறுவனங்களின் ஆலோசனையின் கீழ் திறந்த விலைமனுக்களினை கோருவதன் கீழ் நாடுபூராவும் 55 புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுலாக்குதல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- வீதி அபிவிருத்தி அதிகார சபையினூடாக காணியினை அபகரித்தல் தொடர்பிலான சட்டங்கள், சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குரிய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

- நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக நாடுபூராவும் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் மற்றும் அக்கருத்திட்டங்களுக்கான உரிய காணிகளை அபகரித்தல்/குத்தகைக்கு வழங்குதல் தொடர்பிலுமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைக் கண்காணித்தல், அங்கீகாரத்திற்கென முன்வைத்தல் மற்றும் அமைச்சரவையின் தீர்மானங்கள் தொடர்பில் உரிய பின்னூட்டலினை முன்னெடுத்தல்.

- காணிகளை அபகரித்தல்/குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 18.1 வது பிரிவின் கீழ் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தீர்மானங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

- காணி கட்டளைச் சட்டத்தின் (மீள ஒப்படைப்பு) கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான சொத்துக்களில் அத்துமீறி குடியிருப்போர்களை அகற்றுதல் மற்றும் உரிய சொத்தினை மீள ஒப்படைப்பதற்காக 1979 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க அரச காணியினை மீளஒப்படைக்கும் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்படும் 14(2) பீ பிரிவின் கீழான சான்றிழினைப் பரிசோதித்தல், தயாரித்தல் மற்றும் அரச காணி உடைமையினை மீள ஒப்படைக்கும் சட்டத்தின் கீழ் முன்வைக்கப்படும் 14 (2) பிரிவின் கீழான சான்றிதழினை கௌரவ அமைச்சர் அவர்களின் அங்கீகாரத்திற்கென முன்வைத்தல் மற்றும் அதன் தீர்மானங்களுக்கிணங்க செயற்படுதல்.

- நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நகர அதிகாரப் பிரதேசங்களென பிரகடனஞ் செய்தல் தொடர்பில் ஒருங்கிணைப்புச் செயற்பாட்டினை முன்னெடுத்தல்.

- வர்த்தகக் கருத்திட்டங்கள், கைத்தொழில் கருத்திட்டங்கள், முதலீட்டுச் சபைக் கருத்திட்டங்கள், நகர அபிவிருத்தி திட்டமிடல் கருத்திட்டங்கள், அரச நிறுவனங்கள், நியதிச்சபைகள், மத, தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக சேவைகள் நிறுவனங்கள் தொடர்பிலான காணிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய கடித ஆவணங்களைப் பரீட்சித்தல் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய வீடமைப்புப் பிரேரணைத் திட்டங்கள் மற்றும் சந்தைக் கட்டிடத் தொகுதியினை அபகரித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.

- காணிகளை அபகரிப்பதற்கென ஜனாதிபதி அலுவலகம், அமைச்சுச்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினூடாக முன்வைக்கப்பட்ட கடிதங்கள் தொடர்பில் கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

- பின்வரும் கருத்திட்டங்களின் அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் ஏனைய அங்கீகாரங்களுக்கென முன்வைக்கப்படும் கடிதங்களைக் கண்காணித்தல் மற்றும் உரிய திருத்தங்களை முன்னெடுத்ததன் பின்னர் கௌரவ விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கென முன்வைத்தல்.

  - துறைமுக நகரக் கருத்திட்டம்
  - மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
  - பாரிய கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்.
  - திருகோணமலை பிரதான திட்டத்தினைத் தயாரித்தல்.
  - திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்.
  - வேரஸ் கங்கை கருத்திட்டம்
  - நகர மீளுருவாக்க கருத்திட்டம்

### 3.3.2 காணிக் கிளை

#### பொறுப்பு

அமைச்சு, அதன் கீழுள்ள திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களினூடாக இடம்பெற்று வரும் சகல பொது அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அந்நிறுவனங்களின் தேவையின் பிரகாரம் காணிகளை கையகப்படுத்தல், அரச காணிகளை ஒப்படைத்தல் தொடர்பில் உதவுதல் மற்றும் அமைச்சு சார்பில் நிறுவனங்களுக்கிடையே ஒருங்கிணைப்பினை முன்னெடுத்தல்.

#### கிளையினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் அமைச்சின் கீழ் அமுலாக்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்களினூடாக நிறைவேற்றப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் காணிகளை கையகப்படுத்துதல், ஒப்படைத்தல் மற்றும் மறுசீரமைத்தல் தொடர்பில் அமைச்சு சார்பில் ஒருங்கிணைப்புச் செயற்பாடு மற்றும் அதனுடன் தொடர்பான ஏனைய செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

### 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மூலம் கிடைக்கப் பெறும் வேண்டுகோளுக்கமைய, பின்வரும் கருத்திட்டங்களுக்கான பின்வரும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

- நகர மீளுருவாக்க கருத்திட்டம்
- கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
- மேல் மாகாண பிராந்திய தொழில்நுட்ப நகர கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய விமான நகரக் கருத்திட்டம்
- மேற்குப் பிராந்திய நிர்வாக நகரக் கருத்திட்டம்
- திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம்
- கொலன்னாவ மழைநீர் கால்வாய் மற்றும் சுற்றாடலினை மேம்படுத்தும் கருத்திட்டம்
- பிபிதெமு பொலன்னறுவை கருத்திட்டம்
- பாரிய ஹம்பாந்தோட்டைக் கருத்திட்டம்
- கண்டி பெரும்பாக கருத்திட்டம்
- பேராதென நகர அபிவிருத்தி கருத்திட்டம்
- தம்புள்ள நகர அபிவிருத்தி கருத்திட்டம்
- அனுராதபுர சமுதாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம்.
- கனமற்ற புகையிரத மாறுமிடக் கருத்திட்டம்
- .சுகித்த புரவர நிகழ்ச்சித் திட்டம்

## 3.4 மாநகரப் பிரிவு

#### பொறுப்பு

கொள்கைகளைத் தயாரித்தல், மூலோபாயங்களை அடையாளங் காணுதல், மாநகர ஆரம்பம் மற்றும் தொடர்பான கருத்திட்டங்களை அங்கீகரித்தல், அமுற்படுத்துதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வு.

#### பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்.

- மேற்குப் பிராந்திய விமான நகர அபிவிருத்திக் கருத்திட்டம், மேற்குப் பிராந்திய நிர்வாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம், மேற்குப் பிராந்திய தொழில்நுட்ப நகர அபிவிருத்திக் கருத்திட்டம், மேற்குப் பிராந்திய கடல்சார் நகர அபிவிருத்திக் கருத்திட்டம், மேற்குப் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம், மேற்குப் பிராந்திய திட்டமிடல் கருத்திட்டம் மற்றும் கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகினூடாக அமுற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதல்.
- மாநகர ஆரம்பம், திட்டமிடல் தொடர்பிலான தொழில்வாண்மை நிபுணர்களை உள்ளடக்கி பல்வேறான நிறுவனங்கள், சமூக குழுக்களை விழிப்புணர்வூட்டுவதனூடாக அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுதல், அக்கருத்துக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் கருத்திட்டங்களை அமுலாக்குவதற்குப் பயன்படுத்துதல்.

- மாநகர அபிவிருத்திக்கான கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு பல்வேறான சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தூதரகங்களுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுத்தல்

- மாநகர அபிவிருத்திக்கான கருத்திட்டங்களை அமுலாக்குவதற்குத் தேவையான முதலீடுகளை வழங்குவதை நோக்கங்களாகக் கொண்டு, பல்வேறான சர்வதேச நிறுவனங்கள் மற்றும் தூதுவர் அலுவலகங்களுடன் தொடர்புபடுதல்.

- அமைச்சின் விடயப் பரப்பிற்கு உரித்தான பல்வேறான சர்வதேச தினக் கொண்டாட்டத்தினை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள். ஏனைய உள்ளூர் நிகழ்ச்சித் திட்டங்கள், அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைப்புச் செயற்பாட்டினை முன்னெடுத்தல்.

- கௌரவ அமைச்சரின் தலைமையுடன் அமைச்சில் வாரந்தோறும் நடாத்தப்படும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தினை ஒருங்கிணைத்தல்

- இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களத்துடன் தொடர்பான அபிவிருத்திச் செயற்பாட்டு கருத்திட்டங்கள், காணியுடன் தொடர்பான செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்.

- மாநகர கருத்திட்டங்கள், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்துடன் தொடர்பான பொது முறைப்பாடுகள் தொடர்பில் செயற்படுதல்.

- மாநகர கருத்திட்டங்கள், இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களத்துடன் தொடர்பான அமைச்சரவைப் பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

- மாநகர கருத்திட்டங்களுடன் தொடர்பான பாராளுமன்ற வினாக்களுக்கு விடைகளைத் தயாரிப்பதை ஒருங்கிணைத்தல்.

- மாநகர கருத்திட்டங்களுடன் தொடர்பான செயற்பாட்டுக்குழுக்கள் மற்றும் கருத்திட்ட மதிப்பீட்டுக் குழுக்களின் அமைப்பினை ஒருங்கிணைத்தல்.

- சிறு நகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென சுகித்த புரவர நிகழ்ச்சித் திட்டம் மற்றும் சிகிலெல் தகன நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல்.

- கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பகா போன்ற மாவட்டங்களுடன் தொடர்பான பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை, தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு மற்றும் உரிய மாவட்டச் செயலகங்களுடன் இணைந்து ஒருங்கிணைத்தல்.

- மாநகர கருத்திட்டங்களுடன் தொடர்பான செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல்.

## 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

- **சர்வதேச ஒத்துழைப்பு, சந்தை உறுதிப்பாடு, ஊக்குவிப்பு மற்றும் முதலீட்டுப் பாதுகாப்பு.**

மாநகர பிரதான திட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்டுள்ள கருத்திட்டங்களை அமுற்படுத்துவதற்குத் தேவையான முதலீடுகளைப் பாதுகாப்பதற்கு வெளிநாட்டுப் பயணங்கள் (Mission), கூட்டங்கள், கலந்துரையாடல்களை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்ப ஒத்துழைப்பினை மேம்படுத்துதல், தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு பங்குதாரர்களை இனங்காணுதல் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை மேம்படுத்தும் நோக்கில் அரசுகளுக்கிடையே (G to G) அதேபோல அரச மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கிடையே (G to B) தொடர்புகளை வலுவூட்டுவதற்கு சாத்தியமான சில கூட்டு நாடுகள் பயணிப்பதற்கு அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இருதரப்பு/பலதரப்பு கலந்துரையாடல்கள், புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திடுதல், வர்த்தக மாநாடுகள் மற்றும் மாநகர செயற்பாடுகளை சர்வதேச ரீதியில் மேம்படுத்துவதும் இதற்குள் உள்ளடங்குகின்றன.

**இரு தரப்புக் கலந்துரையாடல்கள், வேலைத்திட்டங்கள் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் - 2018**

| # | செயற்பாடு | தினம் |
|---|---|---|
| 1 | உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பில் முதலீட்டு இயலுமைகளை அலசிப்பார்ப்பதற்கு, சிங்கப்பூர் வர்த்தக பிரதிநிதிக் குழு மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கிடையேயான இருதரப்புச் சந்திப்பு. | 2018.01.25 |
| 2 | காணி மேம்பாடு மற்றும் சொத்து வர்த்தகம் தொடர்பில் ஜப்பானிய முதலீட்டாளர்களுக்கு நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம். | 2018.02.16 |
| 3 | மாநகர அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் முதலீட்டாளர்களினை கவர்ந்திளுக்கும் நோக்கில் ஐரோப்பிய வர்த்தக சபை மற்றும் அமைச்சுக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடல். | 2018.03.09 |
| 4 | அரச தனியார் கூட்டு முதலீட்டு வாய்ப்புக்களை அலசி ஆராய்வதற்கு பேராசிரியர் கிம்யுங்கே அவர்களினைத் தலைமையாகக் கொண்ட கொரிய பிரதிநிதிக்குழுவின் இலங்கை விஜயம். | 2018.07.02 |
| 5 | கனமற்ற புகையிரத போக்குவரத்து முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சீனத் தூதுக்குழுவின் வருகை. | 2018.07.31 |
| 6 | சீனாவின் பீஜிங் நகரில் நடாத்தப்பட்ட “இலங்கைப் பொருளாதாரம் மற்றும் முதலீட்டுக் கலந்துரையாடல் சபை – 2018.” | 2018.09.18 - 20 |
| 7 | இலங்கை குவைட் 2 வது இணைந்த அமைச்சர்கள் குழு கூட்டமைப்பில், குவைட் அரசின் வர்த்தகச் சபை மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அதிகார சபையுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டமை. | 2018.10.09 - 11 |
| 8 | அமெரிக்க ஐக்கியக் குடியரசில் நடாத்தப்பட்ட புத்தாயிரம் சவால்கள் நிறுவனத்தின் ஒன்றிணைந்த சம்பாசணை தொடர்பில் இலங்கை பிரதிநிதிக் குழுவுடன் பங்கேற்பு. | 2018.10.01 - 5 |

- **“சிகிலெல் தகன கருத்திட்டம்”**
  ஆன்மீக வளர்ச்சியினூடாக, தனிநபர் உணர்வினை அதிகரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட சிகிலெல் தகன நிகழ்ச்சித் திட்டம், கொழும்பு, கம்பகா, களுத்துறை மாவட்டங்களில் அமுற்படுத்தப்பட்டுள்ளது என்பதுடன், அதன் கீழ் ரூபா. 58.3 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 32 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- **“சுகித்த புரவர” சிறு நகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்.**
  நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக தயாரிக்கப்பட்ட “சுகித்த புரவர” பிரதான நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிகராக மேல் மாகாணம், வட, மத்திய, தென், கிழக்கு, சப்பிரகமுவ, வடமேல் மற்றும் ஊவா போன்ற மாகாணங்களின் பிரதான நகரங்கள் மற்றும் தொடர்பாக அண்டைய நகரங்களின் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இதன் கீழ் ரூபா. 722.55 மில்லியனைக் கொண்ட 1,048 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- **பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டம் (DCB)**
  கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பகா மாவட்டங்களின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் மதங்களின் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்கென இந்நிகழ்ச்சித் திட்டம் அமுற்படுத்தப்படுகின்றது. மேல் மாகாணத்தின் மாவட்ட செயலாளர்களினால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் (தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தவிர்த்து) கருத்திட்ட முன்மொழிவுகளைப் பரிந்துரை செய்து முன்வைக்கப்பட்டதன் பின்னர் அவற்றினை அங்கீகரித்தல் இவ்வமைச்சினூடாக இடம்பெறுகின்றது. 2018 ஆம் ஆண்டு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை 2,233 ஆகும்.

- **முன்னேற்ற மீளாய்வு**
  கௌரவ அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை, அமைச்சு, அமைச்சின் கீழுள்ள சகல நிறுவனங்கள் மற்றும் கருத்திட்ட தலைவர்களின் கலந்துகொள்ளலுடன் நடாத்தப்படுவதுடன், அதன் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றம் தொடர்பில் பின்னூட்டல் செயற்பாடுகள் இடம்பெறுதல்.

- மாநகர கருத்திட்டங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு செயற்பாட்டுக் குழுக்களினை நியமித்தல் மற்றும் அச்செயற்பாட்டுக் குழுக்கள் தொடர்புடுதல்.
- மேற்குப் பிராந்திய விமான நகர அபிவிருத்தி கருத்திட்டம், மேற்குப் பிராந்திய தொழில்நுட்ப நகர அபிவிருத்தி கருத்திட்டம், மேற்குப் பிராந்திய கடல்சார் நகர அபிவிருத்தி கருத்திட்டம், மேற்குற் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்தி கருத்திட்டம், மேற்குப் பிராந்திய திட்டமிடல் கருத்திட்டம் மற்றும் கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகுடன் ஒருங்கிணைப்பினைச் செயற்பாடுகளினை முன்னெடுத்தல்.

## 3.5 தொழில்நுட்பப் பிரிவு

தொழில்நுட்பக் கிளை மற்றும் தகவல் கிளை இப்பிரிவின் கீழுள்ளது.

### 3.5.1 தொழில்நுட்பக் கிளை

### பொறுப்பு

அமைச்சரவைக் கொள்முதல் குழு, அமைச்சுக்களின் மட்ட ஆலோசனைசார் கொள்முதல் குழு மற்றும் கருத்திட்டக் கொள்முதல் குழுவினை ஒருங்கிணைத்தல், அக்குழுக்களின் தீர்மானங்கள் தொடர்பிலான அறிக்கைகளினை இடுதல், அக்குழு தொடர்பில் முன்வைப்பதற்குத் தேவையான விலைமனு ஆவணங்கள், ஏனைய ஆவணங்களின் பாதுகாப்பு, தாமதமின்றி குழுக்களுக்கு முன்வைத்தல், அதில் எடுக்கப்படும் தீர்மானங்களினை அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களினூடாக செயற்படுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல், அமைச்சரவை மட்டத்தில் கொள்முதல் தொடர்பில் பொதுத் திறைசேரிக்கு சரியான தகவல்களை முன்வைத்து, அமைச்சின் கொள்முதல் செயற்பாடுகளினை மோசடி அல்லது ஊழலில்லாமல் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுத்துதல்.

### கிளையினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்.

- கொள்முதல் நடைமுறையுடன் தொடர்பிலான அமைச்சரவை நியமித்துள்ள நிலையான கொள்முதல் குழு. அமைச்சரவை நியமித்துள்ள கொள்முதல் குழு மற்றும் அக்குழுக்களுடன் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினை நியமிப்பதற்கு பொதுத் திறைசேரியுடன் இணைந்து செயற்படுதல்.
- கொள்முதல் நடைமுறையுடன் தொடர்பிலான அமைச்சு மட்ட ஆலோசனைசார் கொள்முதல் குழு, கருத்திட்டக் கொள்முதல் குழு மற்றும் அக்குழுக்களுடன் தொடர்பிலான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களினை நியமித்தல்.
- கொள்முதல் கூட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- கொள்முதல் தீர்மான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அமுலாக்குவதற்கு அவற்றினை உரிய நிறுவனங்களுக்கு முன்வைத்தல்.
- வினைமனுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் விலைமனுக்களைத் திறப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
- வினைமனுப் பத்திரங்களின் பாதுகாப்பினை உரிய கருத்திட்டங்கள்/நிறுவனங்களுக்கு முனவைத்தல் மற்றும் விலைமனுக்களின் பிரதியினை பாதுகாப்புடன் களஞ்சியப்படுத்துதல்.
- கொள்முதலினை வழங்குவதற்கு முன்னர் ஜனாதிபதி அலுவலகத்தின் மேன்முறையீட்டுச் சபைக்கு உரிய ஆவணங்களை முன்வைத்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- கொள்முதல் முன்னேற்றம் தொடர்பில் உரிய கருத்திட்டங்கள்/நிறுவனங்களுடன் மாதாந்த மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துதல்.
- நாளதுவரைப்படுத்தப்பட்ட கொள்முதல் முன்னேற்ற அறிக்கைகளை மாதாந்தம் திறைசேரிக்கு முன்வைத்தல்.
- நகர மீளுருவாக்கக் கருத்திட்டத்தின் கொடுப்பனவுகளை முன்னெடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முன்வைக்கப்பட்ட நிதி மீள்நிரப்புப் பற்றுச்சீட்டுக்களை பரீட்சித்து பரிந்துரை செய்தல்.
- இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் அடிப்படை விகிதங்களை (BOQ basic rates) மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகாரத்திற்கென அமைச்சின் செயலாளருக்கு முன்வைத்தல்.

## 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

- **கொள்முதல் செயற்பாடுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து கொள்முதல் வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பிலான தகவல்கள்.**

| கருத்திட்டம்/நிறுவனம் | | அமைச்சரவை நியமித்துள்ள கொள்முதல் குழுவுக்கு உரித்தான கொள்முதல். | | அமைச்சு மட்டத்தில் கொள்முதல் குழுவுக்கு உரித்தான கொள்முதல். | | கருத்திட்ட மட்டத்தில் கொள்முதல் குழுவுக்கு உரித்தான கொள்முதல். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட | தற்போது அமுலாக்கப்படும் | வழங்கப்பட்ட | தற்போது அமுலாக்கப்படும் | வழங்கப்பட்ட | தற்போது அமுலாக்கப்படும் |
| 1 | நகர அபிவிருத்தி அதிகார சபை | 03 | 09 | - | - | - | - |
| 2 | இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் | 01 | 02 | - | - | - | - |
| 3 | நகர மறுமலர்ச்சிக் கருத்திட்டம் | 03 | 07 | - | - | - | - |
| 4 | திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் | 02 | 01 | 02 | - | - | |
| 5 | கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம். | 06 | 01 | - | - | 01 | - |
| 6 | தொழில்நுட்ப நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 04 | - | - | - | 11 | 02 |
| 7 | மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 03 | 04 | 01 | 02 | - | - |
| 8 | நிர்வாக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 02 | 01 | - | - | 03 | - |
| 9 | போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் | - | 02 | - | 01 | 05 | 01 |
| 10 | விமான நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | - | 02 | - | - | 03 | 05 |
| 11 | கடல்சார் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 01 | - | - | - | 01 | - |
| 12 | வோட்டர்ஸ் எட்ச் | - | 02 | - | - | - | - |
| 13 | கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலகு | - | - | - | - | 03 | 01 |
| 14 | பேரூந்துக்களைப் புதுப்பித்தல் மற்றும் சகசர கருத்திட்டம் | - | - | - | - | 02 | - |
| **மொத்தம்** | | **25** | **31** | **03** | **03** | **29** | **09** |

- இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டு தொடர்பில் 94 அடிப்படை விகிதங்களை மீளாய்வு செய்து அங்கீகாரத்தினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்தின் நிதி மீளளிப்பு பற்றுச்சீட்டுக்களை பரீட்சித்து பரிந்துரை செய்தல்.

## 3.5.2 தகவல் தொழில்நுட்பக் கிளை

### பொறுப்பு

அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தினை மும்மொழிகளிலும் சரியான நேரத்திற்கு நாளதுவரைப்படுத்துதல், சகல அமைச்சு உத்தியோகத்தர்களுக்கும் அரச கடமைச் செயற்பாடுகள் தொடர்பில் பிரச்சினைகளற்ற வகையில் கணனிச் சேவையினை வழங்குதல், சகல அமைச்சின் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியொன்றினை வழங்குதல், தொடர்ந்து வலையமைப்பு வசதிகளை வழங்குதல், தரத்திலான உயர் கணனி மற்றும் ஏனைய தகவல் தொழில்நுட்பச் சாதனங்களை வழங்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குவதையும் முன்னெடுத்தல், தகவல் தொழில்நுட்ப பிரதிநிதி நிறுவனம் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளைச் செய்து "ஈ-அரசு" எண்ணக்கருவினை நோக்காகக் கொண்ட அரச சேவையொன்றுக்கு வழிகாட்டுதல்.

**கிளையினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்**

- அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தினை உருவாக்குதல்.
- சகல நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியொன்றினை வழங்குதல்.
- வலையமைப்பு வசதிகளைத் தொடர்ச்சியாக வழங்குதல் மற்றும் உரிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- அமைச்சின் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரச்சினைகளினைத் தீர்த்து வைத்தல், அமைத்தல் மற்றும் பயன்பாட்டாளர்களை விழிப்புணர்வூட்டுதல்.
- கணனித் திட்டம் தொடர்பில் பாதுகாப்பு கடவுச் சொற்களை வழங்குதல் மற்றும் கணனியினை உபயோகிப்பவர்களின் கணக்குகளை முகாமை செய்தல்.
- அமைச்சின் தகவல் தொழில்நுட்பக் கருவிகள் தொடர்பில் கொள்முதல் செயற்பாடுகளின்போது விவரக் குறிப்புக்களைத் தயாரித்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- தகவல் தொழில்நுட்ப பிரதிநிதித்துவ நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து உரிய விடயங்கள் தொடர்பில் தேவையான ஒருங்கிணைப்புக்களை முன்னெடுத்தல்.

### 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

- அமைச்சின் இணையத்தளம் சரியான நேரத்திற்கு நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மும்மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ள தகவல்களை அமைச்சின் இணையத் தளத்தில் உள்ளடக்குதல்.
- சகல நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களுக்கும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியொன்றினை வழங்குதல்.
- அமைச்சினுள் 123 கணனிகளுக்கு வலையமைப்பு வசதிகளை வழங்குதல்.

## 3.6 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

### பொறுப்பு

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றினை நோக்கி அமைச்சு, அதன் கீழுள்ள ஏனைய சகல நிறுவனங்கள் மற்றும் கருத்திட்டங்களானவை, நிதிப் பிரமாணம், தாபன விதிக்கோவை மற்றும் அரசினால் அடிக்கடி வெளியிடப்படும் பல்வேறான சுற்றுநிரூபங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய விளைத்திறனாகவும் அதேபோல உன்னதமாக வகையில் செயற்படுகின்றனவா என்பதை ஆய்வு செய்தல், புலனாய்வு செய்தல் மற்றும் அமைச்சின் செயலாளருக்கு சரியானவாறு அறிக்கையிடுதல்.

### பிரிவினூடாக நிறைவேற்றப்படும் பிரதான செயற்பாடுகள்

- வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தினைத் தயாரித்தல்.
- முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக்களைக் கூட்டுதல்
- அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள் மற்றும் உள்ளூர் உதவிக் கருத்திட்டங்களை ஆய்வு செய்தல்.
- அமைச்சின் கண்காணிப்பின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களத்தின் விசேட புலனாய்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துகொள்ளுதல்.

### 2018.12.31 ஆந் திகதிய முன்னேற்றம்

- 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கணக்காய்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து 07 கணக்காய்வு அறிக்கைகளை வழங்குதல்.
- 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களினை நடாத்துதல் மற்றும் உரிய அறிக்கைகளை வழங்குதல்.
- அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளுதல்.
- அறுவக்காலு திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் மற்றும் களுத்துறை பொதுச் சந்தைத் தொடர் கருத்திட்டத்தின் வெளிக்கள பரீட்சைகளில் ஈடுபடுதல்.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் பதிற் கடமையின் மனித வள பதவி தொடர்பில் விசேட புலனாய்வொன்றினை முன்னெடுத்து அறிக்கையொன்றினை வழங்குதல்.

## 4 அமைச்சின் கீழுள்ள நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள்

- **தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்**

1946 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நகர மற்றும் கிராமிய திட்டக் கட்டளைச் சட்டத்தினூடாக நிறுவப்பட்டுள்ள நகர மற்றும் கிராம திட்டத் திணைக்களம், 2000 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 9 ஆந் திகதி இலங்கை பாராளுமன்றத்தினூடாக ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க நகர மற்றும் கிராம திட்டச் (திருத்தம்) சட்டத்தின் கீழ், 2001 மே மாதம் 21 ஆந் திகதி தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம் என்ற பெயரில், மீளவும் பெயர் மாற்றத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆன்மீக மற்றும் சமூகச் செயற்பாடுகள் தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் நோக்குடன், "லோலுகஸ்வவ - அனுராதபுரம் புதியநகரக் கருத்திட்டம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் சாத்திய வளக் கற்கை நிறைவு பெற்றுள்ளது. முன்மொழியப்பட்ட நிலத் திட்டத்தின் பிரகாரம், கிழக்கும் நுவரகம்பளாத்த பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான 81 ஹெக்டயர் நிலப்பரப்பு அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன். உரித்தினைத் தீர்க்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேபோல "பிபிதெமு பொலன்னறுவை" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுகாதாரப் பிரிவின் மேம்பாட்டிற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 10 மருத்துவசாலைகளின் அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோல தெரிவு செய்யப்பட்ட 08 பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதிசார் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன், திம்புலாகல ரஜமகா விகாரையின் முன்கூடம், புதிய பிரிவென மற்றும் துறவிகள் வாழும் மாடத்தின் இறுதிக் கட்டிடத்தினை நிர்மாணித்தல் தொடர்பில் ஆலோசனை சேவைகளினை வழங்குல் மற்றும் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

- **நகர அபிவிருத்தி அதிகார சபை**

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கப் பாராளுமன்றச் சட்டத்தினூடாக நகர அபிவிருத்தி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், ஒருங்கிணைந்த திட்டமிடல் மற்றும் நகர விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பிரகடனஞ் செய்யப்பட்ட பிரதேசங்களின் பொருளாதாரம், சமூகம் மற்றும் பௌதிக அபிவிருத்திச் செயற்பாட்டினை மேம்படுத்துதல் அதன் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக பின்வரும் கருத்திட்ட ங்கள் அமுலக்கப்பட்டுள்ளன.

| விபரம் | இனங்காணப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஒன்பது மாகாணங்களில் நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள். | 145 |
| நகர அபிவிருத்தி அதிகார சபையினூடாக அமுலாக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள். | 19 |
| சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பசுமைப் பூங்காவொன்றினை நிர்மாணித்தல். | 40 |
| புதிய நிலைபேறான கேந்திர நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் மேம்படுத்துதல். | 24 |
| பேரே வாவியினை புனரமைத்தல் மற்றும் மீள அபிவிருத்தி செய்தல். | 01 |
| மெனிங் சந்தையினை பாலியகொடயில் புனரமைத்தல் | 01 |
| நில்வள ஆற்றுக்கரையோர பூங்கா கருத்திட்டம் | 01 |
| போகம்பர சிறைச்சாலையினை புனரமைக்கும் கருத்திட்டம் | 01 |
| காக்கை தீவு கடலோரப் பூங்கா மற்றும் வைபவ மண்டபக் கருத்திட்டம். | 01 |
| **மொத்தம்** | **233** |

- **இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்**

இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்பது 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தஞ் செய்யப்பட்ட, 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொழும்பு மாவட்ட (சட்ட நிலப் பிரதேசங்கள்) காணி மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனச் சபையொன்றாகும்

கூட்டுத்தாபனத்தினூடாக 2018 ஆம் ஆண்டில் கால்வாய்கள், வாவிகள் மற்றும் நடைபாதைகளினை புதுப்பிக்கும் 10 கருத்திட்டங்களும், வெள்ளப்பெருக்கினைக் குறைக்கும் 10 கருத்திட்டங்களும், விரிவான திட்டங்களைத் தயாரித்தல், வரைபடம் அமைத்தல் மற்றும் கற்கை கருத்திட்டங்கள் 5 ம் என்றவாறும், ஈரநிலங்கள் மற்றும் தாழ் நிலங்கள் கருத்திட்டங்கள் 7 ம் என்றவாறும் இடம்பெற்றுள்ளன. அதேபோல வெராஸ் கங்கை கழிவு நீர் அகற்றுதல், சூழலினை மேம்படுத்தும் கருத்திட்டம், களுபாலம நீர்ப்பம்பி கருத்திட்டம் (களுபாலம நீர்ப்பம்பி கருத்திட்டம்) போன்றன இடம்பெற்று வருவதுடன், இராகம பிரதேசத்தின் நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டம் அதேபோல நாரகென்பிட்டி அதிசொகுசு வீடமைப்புக் கருத்திட்டமொன்றினை நிர்மாணிப்பதற்குத் தேவையான ஆரம்பத் திட்டச் செயற்பாடுகளும் இடம்பெற்றுள்ளன.

# 5. அமைச்சினூடாக அமுலாக்கப்பட்டு வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

## 5.1 வெளிநாட்டு நிதியங்களின் கீழ் அமுலாக்கப்படும் கருத்திட்டங்கள்

- **கொழும்பு தலைநகரினை அண்டிய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2012 - 2020)**

கொழும்பு நீர் நிலைகளை அண்டிய வளமான பிரதேசத்தில் வெள்ளப்பெருக்குத் தாக்கங்களைக் குறைத்தல், தெரிவு செய்யப்பட்ட முதலீடுகளினூடாக பிரதேச மட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகள், சேவை புனர்வாழ்வு, மேம்படுத்துதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் கொழும்பு நகரினை அண்டி அமையப் பெற்ற உள்ளூராட்சி நிறுவனங்களின் இயலுமையினை வலுவூட்டுதல் போன்ற நோக்கங்களைத் தொலைநோக்காகக் கொண்டு அமுற்படுத்தப்படும் இக்கருத்திட்டத்திற்கு உலக வங்கியினூடாக கடன் வசதிகள் வழங்கப்படுகின்றன.

கொழும்பு நீர் நிலைகளின் வழங்கல் வடிகாலமைப்பின் ஆற்றலினை மேம்படுத்துதல், சிறு வடிகால் திட்டங்களைப் புனருத்தாபனஞ் செய்தல், மேம்படுத்துதல், வெள்ளப்பெருக்கு, வடிகால் முகாமைத்துவச் சபை ஆற்றலினை அதிகரித்தல் மற்றும் பேரே ஏரியினை அண்டிய நேரியல் பூங்கா மற்றும் பத்தகான பூங்காவினை நிர்மாணித்தல் இதன் கீழ் இடம்பெறுகின்றது. 2012 தொடக்கம் 2018 திசம்பர் நிறைவு வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை 18 ஆகும். அதேபோல நிர்மாணிக்கப்பட்டு வரும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும் என்பதுடன், அங்கீகாரத்தினை எதிர்பார்த்து மற்றும் திட்டமிடல் கட்டத்தில் காணப்படும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை முறையே 04 மற்றும் 02 ஆகும்.

- **மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2014 - 2021)**

இலங்கையில் மூலோபாய ரீதியில் முக்கியத்துவமான பொருத்தமான நகரங்களை அடையாளங்கண்டு அவற்றில் தெரிவு செய்யப்பட்ட நகரச் சேவைகள் மற்றும் பொது நகரச் சூழலினை மேம்படுத்துதல் இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் கீழ் கண்டி, காலி. யாழ்ப்பாணம், அனுராதபுரம், திருகோணமலை, தம்புள்ள, குருனால் மற்றும் இரத்தினபுரி போன்ற நகரங்களை மூலோபாய ரீதியில் மேம்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தினூடாக இந்த அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்கப்படும். கண்டி மற்றும் காலி மூலோபாய நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2014-2021) முதலிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கீழ் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், நீர் வழங்கிலினை மேம்படுத்துதல், கழிவுநீர் அகற்றும் திட்டத்தினை மேம்படுத்துதல் மற்றும் நகர அபிவிருத்திக் கருத்திட்டங்கள் போன்றன இடம்பெற்று வருகின்றன. இக்கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 27,150 மில்லியனாகும்.

கண்டி மற்றும் காலி மூலோபாய நகரங்களுக்கு மேலாக, 2016 ஆம் ஆண்டில் உலக வங்கி உதவிகளின் கீழ் ஐந்து வருட கருத்திட்டமாக (2016-2021) யாழ் நகர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 9,750 மில்லியன் என்பதுடன், இக்கருத்திட்டத்தினூடாக யாழ் நகரின் வீதிகள் மற்றும் வாகன நெரிசலினைக் குறைத்தல், கழிவு நீர் அகற்றும் திட்டத்தினை மேம்படுத்துதல், நகர அபிவிருத்தி மற்றும் கலாசார மரபுகளைப் பாதுகாப்பதற்கான கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோல பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி அனுசரணையின் கீழ் ஐந்து வருட (2016-2021) கருத்திட்டமொன்றாக அனுராதபுர நகரம், மூலோபாய ரீதியில் மேம்படுத்தப்படவுள்ள நகரமொன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன் கீழ், விரிவான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அனுராதபுர நகரில் கழிவறை வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 10,125 மில்லியனாகும்.

இலங்கையின் முக்கிய பொருளாதார வழிகாட்டல்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ள கொழும்புக்கு வெளியே அமைந்துள்ள வளர்ச்சி சாத்தியத்துடன்கூடிய நகர நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு நான்கு வருட (2018-2021) கருத்திட்டமொன்றாக அமுலாக்கப்படும் நிலைபேறான நகர அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் மூலோபாய நகரங்களாக மேம்படுத்துவதற்கு குருனாகல், தம்புள்ள, திருகோணமலை மற்றும் இரத்தினபுரி நகரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 36,900 மில்லியன் என்பதுடன், அது இரண்டு கட்டங்களின் கீழ் அமுலாக்கப்படும்.

- **பாரிய கொழும்ப நகரப் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் நகர அபிவிருத்தி சாதனம் (2009 - 2019)**

பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் நகர அபிவிருத்திச் சாதனம் அல்லது வெளிப்புறச் சுற்றுவட்ட அதிவேக வீதி கருத்திட்டம் (OCH), ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) நிதி அனுசரணையுடன் அமுற்படுத்தப்படுகின்றது. 2007 மார்ச் மாதம் சர்வதேச ஒத்துழைப்புத் தொடர்பிலான ஜப்பான் வங்கி (JBIC) க்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள கடன் உடன்படிக்கையினூடாக இக்கருத்திட்டத்திற்கு நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன.

வெளிப்புறச் சுற்றுவட்ட அதிவேக வீதி கருத்திட்டம், கொழும்பு நகரினுள்ளும் மற்றும் அதற்கு வெளியே மிகவும் சன நெரிசலான சந்தடியான நகர வரையறைகளுக்கு வெளியே அபிவிருத்தியினை விரிவாக்குதல் மற்றும் அதன் போக்குவரத்து நெரிசலினைக் குறைக்கும் நோக்குடன் அமுற்படுத்தப்படும் முதன்மையான வீதி கருத்திட்டமொன்றாகும். இதன் கீழ் பிரதானமாக கொட்டாவ, கடுவல மற்றும் கடவத்த **(3K)** போன்ற நகரங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன.

வலுவான, நிலைபேறான பொருளாதார மேம்பாட்டிற்கென, நேரம், எரிபொருள் மற்றும் வாகனப் பராமரிப்புச் செலவு போன்ற பெறுமதிமிக்க வள விரயத்தினைக் குறைப்பதனூடாக, பயணிகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக உயர்தரத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் இக்கருத்திட்டத்தினூடாக இடம்பெற்று வருவதுடன், அதன் அடிப்படை எதிர்பார்ப்பாவது, போக்குவரத்து நெரிசல், பிரயாணத்திற்கென செலவாகும் நேரம் மற்றும் போக்குவரத்துப் பேரழிவுகளைக் குறைத்தல், தனியார் போக்குவரத்து வசதிகளைப் பாவிப்பதை ஊக்கப்படுத்தாது, பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பாவிப்பதை ஊக்கப்படுத்துவதாகும். இதன் கீழ், கொட்டாவ - பன்னிப்பிட்டிய, கடுவல பிரதேசத்தின் இரண்டு வீதிகள் மற்றும் கொட்டாவ - பன்னிப்பிட்டிய வீதி இது வரையில் புனரமைக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளதுடன், கொட்டாவ - கோக்கந்தர வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. அதேபோல இலங்கையின் முதலாவது பல்நோக்கு போக்குவரத்து நிலையமாக மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தின் நிர்மாணப் பணிகள் இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 3,625 என்பதுடன், 2019 திசம்பர் மாதம் கருத்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.\

- **கனமற்ற புகையிரதப் போக்குவரத்துத் திட்டக் கருத்திட்டம்/ஜய்க்கா (2017 - 2026)**

இலங்கையின் பிரதான பொருளாதார கேந்திர நிலையமான மேல் மாகாணப் பிராந்தியத்தில் நிலவும் அதிக வீதி நெரிசலின் காரணமாக இடம்பெறும் பொருளாதாரப் பாதிப்பு பாரியளவு என்பதுடன், இதன் காரணமாக ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பும் அளப்பெரியது. ஆதலால் கொழும்பு நகரின் பிரதான வீதிகளில் காணப்படும் அதிக வாகன நெரிசலுக்கு நீண்டகால தீர்வொன்றாகவும் மற்றும் விளைத்திறனான பொதுப்போக்குவரத்து மாதிரிகளின் தேவையினைக் கவனத்திற்கொண்டு துரிதகதி போக்குவரத்துத் திட்டமொன்றாக தூண்களின் மேல் ஓடும் கனமற்ற புகையிரத மாறுமிடக் கருத்திட்ட வலையமைப்பொன்றினை அமைப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், இலங்கை அரசினால் ஜப்பான அரசுக்கு முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய விசேட நிபந்தனைகளைக் கொண்ட பொருளாதார உதவிக் கடனின் கீழ் மாலபேயிலிருந்து கொட்டுவ வரை (15.8 கி,மீ.) நீளமான கனமற்ற புகையிரத திட்டமொன்றினை அமைப்பதற்கு ஜப்பான் சர்வதேச ஒத்துபைபு நிறுவனத்தின் நிதி அனுசரணை கிடைத்துள்ளது. அதன் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 342,392 ஆகும். 2018 ஆம் ஆண்டின் நிறைவில் இக்கருத்திட்டத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், கனமற்ற புகையிரத மாறுமிடத் திட்டத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட இலங்கை கனமற்ற புகையிரத மாறுமிட திட்ட சட்ட வரைவு நீதியரசர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

## 5.2. உள்நாட்டு நிதியங்களின் கீழ் அமுற்படுத்தப்படும் கருத்திட்டங்கள்

- **மேற்குப் பிராந்திய போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (2017 – 2024)**

போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைத் தேடுவதற்கு மேற்குப் பிராந்திய மாநகர பிரதான திட்டத்தின் கீழ் விரிவான போக்குவரத்துத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது வழிகாட்டியாக அமையும் என்பதுடன், இணைப்புக்களை மேம்படுத்துதல், பல்நோக்கு போக்குவரத்துத் திட்டங்களுடனான போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்குப் பிராந்திய கனமற்ற புகையிரத மாறுமிடக் கருத்திட்டங்கள் மூன்று (மாலம்பே -கொட்டுவ, களனிய -மொரட்டுவ, இராகம - கிருளப்பான, குணுபிட்டிய -கொட்டாவ - 83.6 கி.மீ. நீளத்தினைக் கொண்ட) அரச பிரத்தியேகக் கூட்டு முயற்சியின் கீழ் அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், கடவத்த பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணித்தல், பேரூந்து முன்னுரிமைப் பாதைகளினை அமுலாக்குதல் மற்றும் பொல்துவ கொஸ்வத்த இடை வீதியினை நிர்மாணித்தல் போன்ற கருத்திட்டங்கள் இடம்பெற்று வருவதுடன், இம் முதலீடுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 797,000 மில்லியனுக்கும் அதிகமாகும்.

- **மேற்குப் பிராந்திய தொழில்நுட்ப நகர அபிவிருத்தி கருத்திட்டம் (2017 – 2020)**

இலங்கையிலுள்ள சாத்தியமான முதலீட்டாளர்கள் மற்றும் சாத்தியமான புதுமையாளர்களினை தொழில்நுட்ப நகரின் மீது நாட்டம் கொள்ளச் செய்தல் அதேபோல புதுமையாளர் வணிகமயமாக்கல் செயல்முறை தொடர்பில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உயர் திறனினைக் கொண்ட தொழில் வேலைப் படையின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்வதனூடாக ஒவ்வொருவருடனும் தொடர்புபடுவதற்கு பொருத்தமான தளமொன்றினை அமைத்தல் இக்கருத்திட்டத்தின் நோக்காகும். இதன் கீழ் 2018 ஆம் ஆண்டினுள் தொழில்நுட்ப நகரின் வீதி வசதி மேம்பாடு தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா. 6,901 மில்லியன் என்பதுடன், 05 கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- **மேற்குப் பிராந்திய விமான நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2017 – 2022)**

விமான நகரம் என்பது விமான நிலையத்தினைச் சார்ந்த, உயர் பெறுமதிகளைக் கொண்ட, நேரம், உணர்திறன் நிறுவனங்கள், அவற்றின் தூரங்களினை வழங்குனர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வர்த்தக கூட்டாண்மைகளுடன் துரிதகதியில் தொடர்புபடுவதற்கு காணி, போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகள் போன்றன ஒன்றிணைக்கப்பட்டுள்ள புதிய நகர மாதிரியொன்றாகும். அது, விமான நிலையத்தினை மையமாகக் கொண்ட பல்நோக்கு சேவைகளினைக் கொண்ட வர்த்த நிலையம் மற்றும் வெளியேறும் நடைபாதையினைக் கொண்டுள்ளதுடன், விமான சேவைகளுடன் தொடர்பான வர்த்தகப் பிராந்தியம் மற்றும் விமான நிலையத்திற்கு இலகுவில் பிரவேசிக்கக்கூடிய மற்றும் வலையமைப்பு வசதிகளை வழங்கிவரும் கலப்பு வர்த்தகம்/நகர அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் சூழலொன்றாகும். இதன் கீழ், தனி விடுதி, வர்த்தகப் பூங்கா, கட்டுநாயக்கா 18 வது மைல் தூணுடன் தொடர்பான பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய பிரவேசக் கருத்திட்டம், கட்டான விமானச் சேவை அக்கடமி மற்றும் விமான நிலையக் கருத்திட்ட நகரக் கருத்திட்டத்தின் செயற்படுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது, இலங்கை அரசின் முதலீடுகளில் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 2,500 மில்லினுக்குக் கிட்டிய தொகையாகும்.

- **மேற்குப் பிராந்திய கடல்சார் நகர அபிவிருத்தி கருத்திட்டம் (2017 – 2021)**

இக்கருத்திட்டம், மேற்குப் பிராந்திய மாநகர திட்டத்தினூடாக இனங்காணப்பட்ட விமான கடல்சார் நகர வர்த்தக மையம் என்ற தொனிப்பொருளின் கீழ் அமுற்படுத்தப்படுவதுடன், இதனூடான பல்நோக்குப் பணி கடல்சார் பிராந்தியமொன்றாக மேம்படுவத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் கீழ், ப்ளூமென்டல் பிரதேசத்தின் வசதிகளை மேம்படுத்தல், கொள்ளுபிட்டியிலிருந்து தெகிவளை வரை பொழுதுபோக்குசார் கடற்கரையோரம் அதேபோல வெலிசர பிரதேசத்தில் வசதி மேம்பாட்டு பூங்காவொன்றினூடாக ஒட்டுமொத்த செயல் நடவடிக்கைகளினை உயர்த்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டம் தொடர்பில் இலங்கை அரசின் முதலீட்டுச் செலவு ரூபா. 34,150 மில்லியனுக்கும் அதிகமாகும்.

- **மேற்குப் பிராந்திய நிர்வாக நகர அபிவிருத்தி கருத்திட்டம் (2017 – 2023)**

இக்கருத்திட்டத்தினூடாக ரூபா. 40 மில்லியனுக்கும் அதிமான பெறுமதியினைக் கொண்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களினை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அரச, பிரத்தியேகக் கூட்டு முயற்சியின் கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ள சாத்தியமான அபிவிருத்தியாளர்களினை வலுவூட்டுதல் மற்றும் எதிர்கால அபிவிருத்தியாளர்களுக்கு அவர்களின் அபிவிருத்தி எண்ணக்கருக்களினை அமுலாக்குதல் தொடர்பில் உதவி வழங்கப்படும். சூழல், நிலைபேறானது எனவும், பொதுசனத் தேவைகள் மற்றும் சாத்திய வளங்களுக்கு இணங்க உறுதிப்படுத்துவதற்கு கருத்திட்டத்தினூடாக முழுமையான கருத்திட்ட காலப்பகுதியினுள் அபிவிருத்தி/முதலீட்டு அளவுகோல் மதிப்பீடு இடம்பெற்றுள்ளது.

இக்கருத்திட்டத்தின் கீழ் பத்தரமுல்ல, டென்சில் கொப்பேக்கடுவ மாவத்தையின் பிரேரிக்கப்பட்ட பல்மாடி கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் (செத்சிறிபாய கட்டம் - IV), பத்தரமுல்ல சந்தியில் பிரேரிக்கப்பட்ட அடுக்குமாடி கலப்பு அபிவிருத்திக் கருத்திட்டம், பிட்டகொட்டுவ பல்நோக்கு போக்குவரத்து நிலையக் கருத்திட்டத்தின் சாத்திய வளக் கற்கை ஆய்வு, நிர்வாக நகரம் தொடர்பில் மின் சூரிய சக்தி கருத்திட்டம், பத்தரமுல்ல சந்தி மற்றும் பொல்துவ வீதியினை இணைக்கும் வீதியினை நிர்மாணித்தல், பாராளுமன்ற அலுவல்களுடன் தொடர்பான செயலாளர் அலுவலகச் சுற்றுச்சூழலினை நிர்மாணித்தல், நிர்வாக நகரத்தினூடாக தற்போதைய மற்றும் எதிர்கால வீதி வலையமைப்புக்களின் இருமருங்கின் இயற்கை அழகினை அலங்கரிக்கும் செயற்பாடுகள், கோட்டை, பலகொட்டுவ சுற்றுச்சூழலில் பிரேரிக்கப்பட்ட சீனா - இலங்கை அருங்காட்சியகத்தினை நிர்மாணித்தல், இலங்கையின் மூத்த கலைஞர்களுக்கு பிரேரிக்கப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டம் மற்றும் 2020 சுகுறு நிர்வாக நகரக் கருத்திட்டம் போன்றனவற்றின் ஆரம்பச் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளன.

- **சகசர அபிவிருத்திக் கருத்திட்டம் (2018 – 2023)**

பொருளாதாரத்திற்குச் சுமையொன்றாக வந்து விழுந்துள்ள பொதுப் போக்குவரத்துச் சேவையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வொன்றாக சகசர கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நம்பக்கத்தன்மை, தரம் மற்றும் ஆறுதல், சிறுதூர ஓட்டத்திற்கு நீண்டநேரம் செல்லுதல், பேரூந்துக்களுக்கிடையேயான போட்டி, பேரூந்துக்களினுள் நிலவும் நெரிசல், பேரூந்து உரிமையாளர்கள் குறைவான இலாபத்தினைப் பெறுதல், வர்த்தகக் கவனக் குறைவு, குறைந்த விளைத்திறன், சுறுசுறுப்பான நேரங்களில் பயண அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு சட்டவிரோத முறைமைகளைப் பாவித்தல், தொழில் பாதுகாப்பு அல்லது சமூகப் பாதுகாப்புப் பயன்கள் இல்லாது போவதன் காரணத்தினால் உயர் ஊழியர் வருவாய் (விசேடமாக பிரத்தியேகப் பிரிவினுள்) போன்றன இப்பிரச்சினைகளுக்கு சான்று பகர்வதுடன், இக்காரணிகள் தொடர்ச்சியாகக் காணப்படுதல் தொழிலினை மேலும் மோசமடையச் செய்கின்றது.

சகசர கருத்திட்டத்தினூடாக இப்பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் பொதுமக்களுக்கு மிகவும் சிறந்த பேரூந்துப் போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குவதை நோக்கங்களாகக் கொண்டு பேரூந்துச் சேவையினை முகாமை செய்தல், கண்காணிப்பு மற்றும் செயல் கட்டுப்பாடு, வருமான முறைமைகளை மதிப்பிடுதல் பேரூந்து உரிமையாளர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்தல் இடம்பெற்றுள்ளது. பிரத்தியேக வருமானத்தினை ஒன்றுதிரட்டுதல் மற்றும் உயர் தர பேரூந்துக்கள் மற்றும் மிகவும் விளைத்திறனான பயண நேரங்களை வழங்குவதனூடாக பேரூந்துப் போக்குவரத்தினை மேம்படுத்துவதும், அதனூடாக மிகவும் முறைசார் தொழில் வாய்ப்புக்களுக்கு முறைசாரா பிரத்தியேக பேரூந்து ஊழியர்களை வலுவூட்டுதல், சட்ட நியதிக் கொடுப்பனவுகள், மாதாந்த வேதனங்கள் மற்றும் பிற வசதிகளை வழங்குவதனூடாக தொழில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் சகசர பயணிகள் போக்குவரத்தினை புனரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், பல்தரப்பு உதவியாளர்கள், நிதிசார் நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தல், மத்திய, மேல் மாகாண சபை மற்றும் மாகாணப் போக்குவரத்து அதிகார சபையுடன் சகசர புனரமைப்பினை முன்னெடுப்பதற்கு தேவையான செயற்பாடுகளினை ஆரம்பித்தல், பங்குதாரர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குதல், ஆலோசனை சேவைகளை வழங்குதல் தொடர்பில் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்றன 2018 ஆம் ஆண்டினுள் இடம்பெற்றுள்ளது. இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 26,000 மில்லியனுக்கும் கிட்டியதொகையாகும்.

- **கொழும்பு தலைநகரினை அண்டிய திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் (2017 - 2020 )**

இக்கருத்திட்டத்தின் கீழ் பாரிய கொழும்பு பிராந்தியத்தினூடாக ஒன்றுதிரட்டப்படும் நகர திண்மக் கழிவுகளினை, அறுவக்காலு பிரதேசத்தில் அமைத்து குறிப்பிட்ட கழிவறை குப்பைகளைப் போடுவதற்கு ஏற்றியிறக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவு அ.டொ. 120.41 மில்லியன் என்பதுடன், இது 4 பொதிகளினை அடிப்படையாகக் கொண்டு அமுலாக்கப்படும்.

A பொதி - (மாறும் நிலையங்களினை களனி மற்றும் அறுவக்காலு பிரதேசங்களில் அமைத்தல்)

B பொதி - (அறுவக்காலு பிரதேசத்தில் கழிவறைக் குப்பைகளைப் போடும் இடத்தினை நிர்மாணித்தல்)

C பொதி - (புகையிரத வீதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் தொடர்பிலான வீதியினை நிர்மாணித்தல்.

D பொதி - (புகையிரத உபகரணங்கள், எந்திரப்பொறிகள் மற்றும் பிற மேம்பாடு தொடர்பிலான கொள்முதல்)

2018 திசம்பர் நிறைவு வரையில் இக்கருத்திட்டத்தின் பௌதிக முன்னேற்றம் 47% ஆகும்.

கொழும்பு நகரினை, தூய்மையான நகரமொன்றாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட "நிகசல புரவர" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 3R எண்ணக்கருவின் பிரகாரம் குப்பைகளை ஒன்றுதிரட்டும் நிலையங்களை, பாடசாலை மட்டம் மற்றும் வீடமைப்பு தொடர் குடியிருப்புக்கள் மட்டத்தில் அமைத்தல், தெரிவு செய்யப்பட்ட வீடமைப்புத் தொடர் குடியிருப்புக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு குப்பைகளை முகாமை செய்தல் தொடர்பிலான பயிற்சியொன்றினை வழங்கி உரிய வீடமைப்புத் தொடர்களின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களின் பொறுப்பு உத்தியோகத்தர்களாக நியமிப்பதும் இடம்பெற்றுள்ளது

.

- **துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (2016 – 2019)**

269 ஹெக்டயர் கடல்சார் நிலப்பரப்பினை மீட்டெடுத்து நிர்மாணிக்கப்பட்டு வரும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம், இலங்கையின் மத்திய வர்த்தக மாவட்டத்தினை விரிவுபடுத்தி நிர்மாணிக்கப்படும் நவீனமான நகர அபிவிருத்தி கருத்திட்டமொன்றாகும். இந்து சமுத்திரத்தின் வெப்பமான நீரின் வழியாக திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்படும் இப்புதுமையன நகரம், தெற்காசியாவிலேயே முக்கியத்துவமிக்க குடியிருப்பு மற்றும் வர்த்தக இடமாக விளங்கும்.

கொழும்பு துறைமுக நகரம், தெற்காசியப் பிராந்தியத்தினுள் வாழ்வதற்கு, பணியாற்றுவதற்கு மற்றும் விளையாடுவதற்கு பொருத்தமான சூழலொன்றினைக் கொண்ட மிகவும் நாட்டம் கொள்ள வைக்கக்கூடிய நகரமாகும். சர்வதேச மட்டத்தில் இக்கருத்திட்டம், துரிதகதியில் அதிகரிக்கும் உள்ளூர் சனத்தொகைக்கு, பொழுதுபோக்குசார் மற்றும் வர்த்தகம் போன்ற பிரிவுகளுடன் பிணைக்கப்பட்டு சுற்றுலாத் துறையினை துரித வளர்ச்சிக்கு உதவும் பிராந்தியத்திற்கு பல அபிவிருத்தி மூலோபாயங்கள் ஒன்றுசேர்க்கப்படும். அதன் பிரகாரம், இத்துறைமுக நகரம், ஆசியா மற்றும் மேற்குக்கிடையே சிறந்த தொடர்பொன்றினை உருவாக்கி பிராந்தியத்தினூடாக எதிர்காலத்தினை வலுவூட்டுவதற்கான வாயிலாக விழங்கும்.

**செயற்திறன்**

**பௌதிக செயற்திறன் - 2018 திசம்பர் நிறைவு வரை**

| கருத்திட்டத்துடன் தொடர்பான கூறுகள் | செயற்திறன் (%) |
|---|---|
| **உள்ளூர் கூறு (அ.டொ. 1.0 மி.)** | |
| புதிய களனிப் பாலத்திலிருந்து மேலாக நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவாயில் அதிவேக வீதி | முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. |
| கடற்கரையோர வீதியிலிருந்து (Marine Drive) மேலாக நிர்மாணிக்கப்படும் துறைமுக நுழைவாயில் அதிவேக வீதி வரையான சுரங்கப் பாதை. | சாத்தியவளக் கற்கை ஆய்வு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| கனமற்ற புகையிரத வீதியினை, கொட்டுவ பல்நோக்கு போக்குவரத்து நிலையம் மற்றும் துறைமுக நகரத்துடன் இணைத்தல். | சாத்தியவளக் கற்கை ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது. |
| நீர், மின்சாரம் மற்றும் கழிவு நீர் வலையமைப்பு | துறைமுக நகர வரையறை வரை தொடர்புபட்டுள்ள இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. |
| **வெளிநாட்டுக் கூறு (அ.டொ. 1.4 பி.)** | |
| நிர்மாணிப்பு | 97% |
| மீட்பு | 95% |
| நில மேம்பாடு | 80% |

**நிதிசார் முன்னேற்றம் - 2018 திசம்பர் நிறைவு வரை**

| கூறு | செயற்திறன் | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு | செலவு | % |
| உள்ளூர் கூறு (அ.டொ. 10 மி.) | ரூ.3,335 மி. | ரூ. 3,255 மி. | 98 |
| வெளிநாட்டுக் கூறு (அ.டொ. 1.4 பி.) | | **அ.டொ. 700 பி.** | 50 |

- **திருகோணமலை மாவட்டத்திற்கான பிரதான திட்டமொன்றினைத் தயாரித்தல் (2017 - 2018)**

ரூ. 149.78 மி. செலவில் சிங்கப்பூரின் Surbana Jurong அமைப்பின் ஒத்துழைப்புடன், திருகோணமலை மாவட்டம் தொடர்பிலான பிரதான திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன் கீழ், திருகோணமலை மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலாத்துறை, மற்றும் திருகோணமலை துறைமுகத்துடன் தொடர்பான அபிவிருத்தி போன்ற துறைகள் தொடர்பில் தேவையான குறுங்கால, நடுத்தரக் கால மற்றும் நீண்டகால மூலோபாயக் கருத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. பிரேரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி ஒழுங்கு விதிகளினை அமுலாக்குவதற்கு உரிய திட்டத்தினை சட்டபூர்வமாக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிற உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

- **நகர மீளுருவாக்க கருத்திட்டம் (2012 - 2019)**

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொழும்பு நகரம் மற்றும் அதற்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடியிருப்பாளர்களினை, மீளப் புனர்வாழ்வளிப்பதற்கு 60,000 வீடமைப்பு அலகுகளை நிர்மாணிக்கும் நோக்கில் நகர மீளுருவாக்க கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2013 தொடக்கம் 2018 திசம்பர் நிறைவு வரை 16 பிரதான கருத்திட்டங்களின் கீழ் 8,113 வீடமைப்பு அலகுகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல. 7,694 வீடமைப்பு அலகுகளுடனான 12 கருத்திட்டங்கள் இது வரையில் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

## நிறுவனக் கட்டமைப்பு

## மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

இணைப்பு 01

